திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## சலுகைகளை படிப்படியாக விலக்க வேண்டும்: சி. ரங்கராஜன்

First Published : 11 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 11 Feb 2010 02:17:51 AM IST



புது தில்லி, பிப்.10: சர்வதேச தேக்க நிலையிலிருந்து மீள்வதற்காக தொழில் நிறுவனங்களுக்கு அரசு அளித்த வரிச் சலுகையை படிப்படியாக விலக்க வேண்டும் என்று பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழுத் தலைவர் சி. ரங்கராஜன் கூறியுள்ளார்.

2008-ம் ஆண்டின் பிற்பாதியில் ஏற்பட்ட சர்வதேச பொருளாதார சரிவு இந்தியாவிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. தொழில் நிறுவனங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. இதிலிருந்து தொழில் நிறுவனங்களைக் காப்பதற்காக மத்திய அரசு வரிச் சலுகைகளை இரண்டு கட்டங்களாக அளித்தது. இதனால் அரசுக்கு வரி வருவாய் இழப்பு ரூ. 1.86 லட்சம் கோடியாக உயர்ந்தது. வரிச் சலுகையால் இந்திய நிறுவனங்கள் சரிவிலிருந்து மீண்டன. இருப்பினும் வரிச் சலுகைகள் தொடர வேண்டும் என்றே வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் அரசின் நிதிப் பற்றாக்குறை அதிகரித்து அபாயகரமான அளவை எட்டியுள்ளது. நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளும் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. எனவே வரிச் சலுகைகளை படிப்படியாகத் திரும்பப் பெறுவது குறித்து அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

இந்நிலையில், நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு நிதி ஆண்டில் 7.2 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு வரிச் சலுகைகளைத் திரும்பப் பெறலாம் என மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தார். இவரது கருத்தை தற்போது பிரதிபலிக்கும் வகையில் ரங்கராஜனும் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மத்திய புள்ளியியல் மையம் (சிஎஸ்ஓ) குறிப்பிட்டபடி நடப்பு நிதி ஆண்டில் பருவமழை நன்கு இருக்கும் என்றும், வேளாண் உற்பத்தி குறைய வாய்ப்பில்லை என்றும் தெரிவித்துள்ளது. வேளாண் உற்பத்தி 0.2 சதவீதமாக இருக்கும் என்றும் கணித்துள்ளது. இத்தகைய சூழலில் வரிச் சலுகைகளை படிப்படியாக திரும்பப் பெறுவது குறித்த அறிவிப்பை பட்ஜெட்டில் வெளியிடுவதே சிறந்ததாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

வரிச் சலுகைகள் எந்தெந்த காலகட்டத்தில் எப்படி திரும்பப்பெறப்படும் என்பதை தெளிவாக விளக்க வேண்டும். அதன்படி அதை செயல்படுத்துவதன் மூலம்தான் நிதிப் பற்றாக்குறையைக் குறைக்க முடியும்.

வரிச் சலுகையை ஒரேயடியாக திரும்பப் பெறாமல் படிப்படியாக திரும்பப் பெற வேண்டும். பல்வேறு வரிகளைத் தவிர்த்து ஜிஎஸ்டி வரி விதிப்பை அமல்படுத்தும் வகையில் பட்ஜெட்டில் அறிவிப்புகள் இடம்பெற வேண்டும் என்றும் ரங்கராஜன் சுட்டிக் காட்டினார்.

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி அதிகரித்திருப்பதால் வரிச் சலுகைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று திட்டக் குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா ஏற்கெனவே தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வரிச் சலுகையை ரத்து செய்வதன் மூலம் நிதிப் பற்றாக்குறையை 6.8 சதவீதத்திலிருந்து 6.2 சதவீதமாகக் குறைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

முந்தைய ஆண்டு நாட்டின் நிதிப் பற்றாக்குறை 6.2 சதவீதமாக இருந்தது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 76.48 அடி

First Published : 11 Feb 2010 06:42:37 AM IST

சேலம், பிப். 10: மேட்டூர் அணை நீர்மட்டம் புதன்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 76.48 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 868 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து விநாடிக்கு 1,800 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

அணை நீர் இருப்பு 38.51 டி.எம்.சி.

## தஞ்சையில் விவசாயிகளுக்கு நுகர்வோர் விழிப்புணர்வுப் பயிற்சி

First Published : 11 Feb 2010 07:04:00 AM IST

தஞ்சாவூர், பிப். 10: இந்திய அரசின் நிதியுதவியுடன் மாவட்ட அளவில் விவசாயிகள், விவசாயம் சார்ந்த பணிபுரியும் நுகர்வோர் ஆகியோருக்கு நுகர்வோர் உரிமை, கடமை, உணவுப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி அளிக்க அரசு ஆணையிட்டதையடுத்து, தஞ்சாவூரில் முதல் கட்டப் பயிற்சி புதன்கிழமை நடத்தப்பட்டது.

விவசாயிகள் பயன்படுத்தும் விதைகள், உரம், பூச்சி மருந்து, வேளாண்மை உபகரணங்கள், பயிர்க் காப்பீடு, அவர்களுக்கான உரிமைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண் இடுபொருள்கள் வாங்கும்போது அதற்கான ரசீதைக் கண்டிப்பாக வாங்க வேண்டும். பொருள்கள் தரமற்றதாக இருந்தால் நுகர்வோர் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து, உரிய நிவாரணம் பெறும் வழிவகைகள் குறித்தும் பயிற்சியில் தெரிவிக்கப்பட்டது.

பயிற்சி பெறும் விவசாயிகள், நுகர்வோர் நீதிமன்றங்களில் வழக்குரைஞர்கள் இன்றி வாதிடலாம் என்றும், அதற்கான முறைகள் குறித்தும் பயிற்சியளிக்கப்பட்டது.

கும்பகோணம், சாக்கோட்டை உழவர் பயிற்சி மைய வேளாண் உதவி இயக்குநர் எஸ். உதயகுமார், கும்பகோணம் வேளாண் அலுவலர் வீ. சுப்பிரமணியன், மாவட்ட வழங்கல் அலுவர் கனகராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம்**

First Published : 11 Feb 2010 02:13:07 AM IST

திருவண்ணாமலை, பிப். 10:திருவண்ணாமலை வட்டார வேளாண் துறை சார்பில் மேல்கச்சிராபட்டு, இசுக்கழிகாட்டேரி, சு.கீழ்நாச்சிப்பட்டு கிராமங்களில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடந்தது.

பயறு வகை, மணிலா, நெல் பயிர்களில் தரமான விதை உற்பத்திக்கு வளர்ச்சிப் பருவத்தில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள், விதைச் சான்று நடைமுறைகள் குறித்து விளக்கப்பட்டது.

விதை ஆய்வு துணை இயக்குநர் துரைசாமி, விதைச் சான்று உதவி இயக்குநர் சுப்பிரமணியன், வேளாண் உதவி இயக்குநர் அ.பாலா, விதை ஆய்வு அலுவலர் ஏழுமலை ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

**தொடர் மின் தடை: விவசாயிகள் மறியல்**

First Published : 11 Feb 2010 12:57:36 AM IST

திண்டிவனம், பிப்.10: திண்டிவனம் அடுத்த வெள்ளிமேடுபேட்டையில் கடந்த சில நாள்களாக ஏற்படும் தொடர் மின் தடையால் விவசாயம் பாதிக்கப்படுவதாகக் கூறி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் புதன்கிழமை திடீர் சாலை மறியல் (படம்) செய்தனர்.

÷100-க்கும் மேற்பட்ட விவசாயிகளும் இந்த சாலை மறியலில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதவராக அந்த பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும் வியாபாரிகளும் மறியலில் கலந்து கொண்டு மின்சாரத் துறைக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

÷இந்த சாலைமறியலால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கபபட்டது. சம்பவ இடத்துக்கு வந்த திண்டிவனம் காவல் நிலைய ஆய்வாளர் நசீர்பாஷா மற்றும் போலீஸô்ர் மின்வாரிய செயற்பொறியாளர் வேலுச்சாமி உள்ளிட்ட அதிகாரிகளை அழைத்து பேசினர்.

÷இதில் அதிகாரிகள் தரப்பில் மின் தடை ஏற்படாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்தின் பேரில் சாலை மறியல் கைவிடப்பட்டது.

**காளான் வளர்ப்பு பயிற்சி**

First Published : 11 Feb 2010 02:02:54 AM IST
Last Updated :

சென்னை,பிப்.10: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சார்பில் சென்னையில் பிப்ரவரி 16-ம் தேதி காளான் வளர்ப்பு பயிற்சி நடைபெறவுள்ளது.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு:

நகர்ப்புற தோட்டக்கலை வளர்ச்சி மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பி-4, ஆறாவது அவென்யூ, கே-4 காவல் நிலையம் பின்புறம், அண்ணாநகர், சென்னை-40.

தொலைபேசி: 044-2626 3484, 4217 0506.

**பயிர்க் காப்பீடு வழங்க தீர்மானம்**

First Published : 11 Feb 2010 04:24:54 AM IST

தேவகோட்டை, பிப். 10: சிவகங்கை மாவட்டம், தேவகோட்டைப் பகுதியில் பயிர் காப்பீடு வழங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென, செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு தலைவர் வள்ளுவன் தலைமை வகித்தார். அ.தி.மு.க. கவுன்சிலர் செந்தில்நாதன், துணைத் தலைவர் ராமலிங்கம் உள்ளிட்டோர் தேவகோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் விளைந்த நெற்பயிரில் ஒருவித நோய் தாக்கியுள்ளதால், கதிர் முற்றும் நிலையில் கருகிவிட்டதாகத் தெரிவித்தனர்.

இதை, தலைவர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் ஆதரித்தனர். எனவே, இந்த ஆண்டு இப்பகுதிக்கு பயிர்க் காப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினர். பின்னர், இதை ஏற்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், தளக்காவூரில் உருவாகவுள்ள சம்ததுவபுரத்துக்கு இடத்தை சுத்தம் செய்தது, ஏற்கெனவே உள்ள விஜயபுரம் பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டு வரும் பெரியாரின் சிலைக்கு நிதி ஒதுக்குவது உள்ளிட்டத் தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

**தலையங்கம்: இன்றைய 16-ம் லூயிக்கள்...**

First Published : 11 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 11 Feb 2010 12:34:16 AM IST

சர்க்கரை சாப்பிடாததால் இறந்தவர் யாருமில்லை- விலை உயர்வு பற்றி நாடே கொதித்துக் கொண்டிருக்கையில், எரியும் நெருப்புக்கு எண்ணெய் வார்த்ததுபோல இத்தகைய கருத்தை தெரிவித்திருக்கிறது தேசியவாத காங்கிரஸ் கட்சியின் கொள்கை முழக்க இதழ் "ராஷ்டிரவாதி'.

விலை உயர்வுக்கு சரத் பவார் மட்டுமே காரணமல்ல என்பதை விளக்குவதற்காக இப்பத்திரிகையில் வெளியான கட்டுரையில் சர்க்கரை சாப்பிடாததால் இறந்தவர் யாருமில்லை என்று சொல்லியிருப்பதும் "இதுக்குப் போயி அலட்டிக்கலாமா!' என்கிற தொனியில் அந்தக் கட்டுரை அமைந்திருப்பதும்தான் அனைவரையும் கோபப்படச் செய்துள்ளது.

ஒரு குடும்பத்தினர் பெட்ரோல், உணவுப்பொருள், ஆடம்பரப்பொருள் ஆகிய பலவற்றுக்காகச் செலவிடும் பணத்தை ஒப்பிடும்போது சர்க்கரை விலை உயர்வினால் அக் குடும்பத்தின் மாதச் செலவில் ரூ.60 முதல் 90 வரை அதிகரிப்பது ஒரு பெரிய சுமை அல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளதை, மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, உண்மை போலவே தோற்றம் தரும்.

இன்னும் ஒரு படி மேலேபோய், "சர்க்கரை அதிகம் சாப்பிடுவதால் நோய்கள் ஏற்படுகின்றன' என்று சொல்லும்போதும், "உப்பும் சர்க்கரையும் வெள்ளை விஷம்' என்று மருத்துவ உண்மைகள் பேசும்போதும், சர்க்கரை விலை உயர்ந்தால் நாட்டின் சுகாதாரம் பெருகும் என்றும் மக்களை நினைக்க வைத்துவிடவும் செய்வார்கள். ஆனால் இவையெல்லாம் சரியான வாதமா என்று பார்த்தால், இல்லை என்பதுதான் கசப்பான உண்மை.

சாதாரண தரம் கொண்ட சர்க்கரையின் விலை கடந்த ஓராண்டில் ஒரு கிலோ ரூ.22லிருந்து ரூ.42 வரை உயர்ந்துள்ளது என்றால், இதன் அடுத்தடுத்த தாக்கம் இனிப்பு பொருள்களில் மட்டுமன்றி, சாதாரண தேநீர் கடையில் காபி, டீ விலை உயர்வுக்கும் காரணமாக இருக்கிறது என்பதும், இது ஒவ்வொரு மனிதனுக்கும் நாள்தோறும் கூடுதல் செலவினத்தை ஏற்படுத்துகிறது என்பதும் அமைச்சருக்கோ, அல்லது அவருடைய கொள்கை முழக்கப் பத்திரிகைக்கோ தெரியாதது அல்ல. ஆனாலும், அவர் எதையாவது சொல்லி தன்னைத் தற்காத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

மகாராஷ்டிர மாநிலத்தில் பொது விநியோகத்துக்காக கையிருப்பில் வைக்கப்பட்டிருந்த 72,684 டன் சர்க்கரையை ரூ.123 கோடி லாபத்துக்கு தனியார் சர்க்கரை வியாபாரிகளுக்கு விற்பனை செய்தது ஏன்? என்று ஒரு சங்கடமான கேள்வியை ஆங்கில நாளிதழ், முதலமைச்சர்கள் கூட்டத்துக்கு முந்தைய நாள் வெளியிட்டதால், இதையெல்லாம் சமாளிக்கும் விதத்தில் இந்தக் கட்டுரையை "ராஷ்டிரவாதி' வெளியிட்டுள்ளது.

உலகிலேயே பிரேசிலுக்கு அடுத்தபடியாக இந்தியாவில்தான் அதிக அளவு கரும்பு சாகுபடி நடைபெறுகிறது. 570 சர்க்கரை ஆலைகளில் 35 கோடி டன் கரும்பு பிழியப்படுகிறது. ஆனால் இந்தியாவில் ரேஷன் கடைகளில் கிலோ ரூ.13.50க்கும், வெளிச்சந்தையில் சர்க்கரையின் தரத்துக்கேற்ப ரூ.35 முதல் ரூ.60 வரைக்கும் கிடைக்கிறது. சர்க்கரை விலை உயர்வு மக்களை பாதிக்காதது உண்மையாக இருக்குமென்றால், ஏன் இந்த இரு விதமான விலை நிர்ணயம்?

மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா கட்சி ஆட்சியின்போது, ரேஷன் கடைக்கும் வெளிச்சந்தைக்கும் வேற்றுமை இல்லாத அளவுக்கு சர்க்கரை விலை ஒரே விதமாக அமைந்திருந்தது. ஆனால், அதன் பிறகு அத்தகைய சமநிலை ஏற்படவே இல்லை. பல ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் அது சாத்தியமாகவே இல்லை.

சர்க்கரை விலை உயர்வு மக்களைப் பெரிதாக பாதித்ததா இல்லையா என்பது ஒருபுறம் இருக்கட்டும், இந்த விலை உயர்வால் சர்க்கரை ஆலைகளுக்கு கொள்ளை லாபம் கிடைத்ததா இல்லையா? சர்க்கரை விலை உயர்வு மிகக் குறைவு என்ற வாதம் உண்மையாக இருக்குமானால், இந்த கொள்ளை லாப சர்க்கரை ஆலைகள் சர்க்கரையை விலை உயர்த்தாமல் மக்களுக்கு வழங்கி சேவை செய்திருக்கலாமே! சர்க்கரை ஆலைகளின் நண்பர் என்று கருதப்படும் மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார், தானே இவர்களிடம் பேசி, மக்கள் நலனுக்காக இந்தச் சின்ன விலை உயர்வை தடுத்திருக்கலாமே! ஏன் செய்யவில்லை?

சர்க்கரை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை சில மாதங்களுக்கு முன்பு சரத் பவார் அறிவித்திருந்தார். இதன்படி டிசம்பர் 2010 வரை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் சுங்கவரி இல்லாமல் சர்க்கரையை இறக்குமதி செய்துகொள்ளலாம். இந்த அளவுக்கு சர்க்கரை ஆலைகள் மேல் அன்பு காட்டும் பவார், ஏழை விவசாயிகள் மீது அன்பு பாராட்டவில்லை என்பது அனைவரும் அறிந்தது. இப்போது சர்க்கரை நுகர்வோர் எவரைப் பற்றியுமே அவர் கவலைப்படவில்லை என்பதுதான் அவர் ஆளுமையின் புதிய வெளிப்பாடு.

இந்தியா முழுவதிலும் 4.5 கோடி விவசாயிகள் கரும்பு பயிரிடுகிறார்கள். அவர்கள் சாகுபடி செய்து கொண்டுவந்து தரும் கரும்புக்கு உரிய, நியாயமான விலையை கொடுத்தாலே அவர்கள் விலைஉயர்வை ஓரளவு சமாளிப்பார்கள். ஆனால் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல், ஆலைகளுக்கு சாதகமாக சட்டத் திருத்த மசோதா

கொண்டுவரும் மத்திய வேளாண்மைத் துறை, சர்க்கரை விலை உயர்வால் பாதிப்பில்லை என்பதை மட்டுமே நியாயப்படுத்த முயல்கிறது.

மாநில அரசுகளின் ஆதரவு விலையை ஆலைகள் அளிக்க வேண்டிய கட்டாயமில்லை என்ற சட்டப் பிரிவுக்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியதால், அதை மட்டுமே நீக்கினார்கள். ஆனால், எரிசாராய விற்பனையில் விவசாயிக்கு கணிசமான பங்கு பற்றியும் கண்டுகொள்ளவில்லை. ஆலைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள வேறு சலுகைகளும் அப்படியே அந்த திருத்தப்பட்ட சட்ட மசோதாவில் தொடரவே செய்தன.

விலைஉயர்வு தாங்கவில்லை என்று துடிக்கிறபோது சர்க்கரை விலையால் யாருக்கும் பாதிப்பில்லை என்று சொல்வது அவர்களது மனநிலையை அம்பலமாக்குகிறது. "....பசி தீரும்' என்றால் "உயிர் போகும்' எனச் சொல்லும் செல்வர்கள் நீதி நன்றோ' என்று பாடிய பாவேந்தர் பாரதிதாசனை நினைவுகூர வைத்துவிட்டார்கள்.

### சுற்றுச்சூழலை பாதுகாக்கும் சூடோமோனாஸ்

First Published : 11 Feb 2010 06:57:13 AM IST

ஈரோடு, பிப். 10: வயல்களில் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதிலும், சுற்றுச்சூழலுக்கு ஏற்புடைய உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்காமல் பாதுகாப்பதிலும் சூடோமோனாஸ் கலவை முக்கியப் பங்கு வகிக்கிறது என்று வேளாண்மை இணை இயக்குநர் எ.கோபால் தெரிவித்தார்.

மண்ணின் மூலம் பரவும் நோய்களான வேரழுகல், வாடல் நோய், நாற்றழுகல் நோய், குண்டான்தடி வீக்கம் போன்ற நோய்களை சூடோமோனாஸ் கலவை கட்டுப்படுத்துகிறது.

மேலும் இழை வழியாக பரவும் பூசண நோய்களான குலை, இலையுறை கருகல், இலைப்புள்ளி மற்றும் ஆன்ந்த்ராக்னோஸ் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளையும் குறைக்கிறது. நெல்லில் இலைச்சுருட்டு புழு, தண்டுதுளைப்பான், வாழையில் வேர்குடையும் நோய் நாற்புழு, காய்கறிகளில் வேர்முடிச்சு நாற்புழு பாதிப்புகளையும் குறைக்கவும் இந்த கலவை உதவுகிறது.

நிலக்கடலை, சூரியகாந்தி, எள், பருத்தி பயிர்களின் வேர் அழுகல் மற்றும் வாடல் நோயை கட்டுப்படுத்தவும், மாம்பழத்தில் அழுகல் நோயை கட்டுப்படுத்தவும் இந்த கலவை உதவுகிறது.

இந்த கலவையின் பயன்பாடுகள் குறித்து அறிந்துகொள்ளவும், தேவையான கலவையை பெற்றுக்கொள்வதற்கும் அப்பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்புகொள்ளலாம் என்று வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்தார்.

### தனியார்வசம் ஒப்படைத்த பூங்காவிலிருந்து மரக்கன்றுகள் அகற்றம்

First Published : 11 Feb 2010 06:43:58 AM IST

உதகை, பிப். 10: உதகையில் நகரப் பேருந்து நிலையப் பகுதியில் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்ட நகராட்சி பூங்காவிலிருந்து அகற்றப்பட்ட மரக்கன்றுகளை மீண்டும் நடாவிட்டால் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உதகை நகர மக்கள் விழிப்புணர்வு சங்க செயலர் ஜனார்த்தனன் மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்ட இயக்குநருக்கு அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்துள்ளதாவது:

மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட நிதியால் உருவாக்கப்பட்ட உதகை நகர பேருந்து நிலையம் அருகிலுள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் நினைவு பூங்காவில் நடப்பட்டிருந்த அனைத்து மரக்கன்றுகளும் அகற்றப்பட்டுள்ளன. இவை மரங்களாகும்போது அருகிலுள்ள கட்டடங்களுக்கு இடையூராக இருக்கும் என்பது இப்பூங்காவை பராமரித்து வரும் தனியார் அமைப்பினரின் கருத்தாகும்.

உதகை நகராட்சி நிர்வாகம் நகரிலுள்ள பூங்காக்களை தனியார் வசம் ஒப்படைக்கக் கூடாது என ஏற்கனவே வலியுறுத்தப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதத்தில் பெய்த பலத்த மழையால் மாவட்டத்தில் உயிரிழந்தோரின் நினைவாகவே இப்பூங்காவில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டிருந்தன. எனவே, இப்பூங்காவில் மீண்டும் மரக்கன்றுகளை நட்டு அவற்றை பராமரிக்கவில்லையெனில் இப்பூங்காவை பராமரிக்க தனியாருக்கு உதகை நகராட்சியிலிருந்து வழங்கப்பட்ட உத்தரவு செல்லாது என அறிவிக்க வேண்டும்.

இப்பூங்காவில் மீண்டும் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நீதிமன்றத்தை அணுகப் போவதாகவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பண்ணைத் தொழிலாளர்கள் உண்ணாவிரதம்**

First Published : 11 Feb 2010 06:47:48 AM IST

புதுக்கோட்டை, பிப். 10: ஊதிய நிலுவைத் தொகையை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி அரசுப் பண்ணைத் தொழிலாளர்கள் சங்கத்தினர் (ஏஐடியுசி) புதுக்கோட்டையில் புதன்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உண்ணாவிரதத்துக்கு பண்ணைத் தொழிலாளர் சங்க மாநிலத் துணைத் தலைவர் உ. அரசப்பன் தலைமை வகித்தார். மாநிலப் பொருளர் ஆர். செல்வராஜ் முன்னிலை வகித்தார்.

ஆலங்குடி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். ராஜசேகரன் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடக்கிவைத்தார். அவர் பேசுகையில், ""கோரிக்கைகளை அரசின் கவனத்துக்கும் அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டுசெல்வதற்கான அடையாளமாகவே உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்துகிறோம். ஆனால், இப்போது அதற்கெல்லாம் மதிப்பே இல்லாமல் போய்விட்டது. இதே கோரிக்கையை வலியுறுத்தி கடந்த டிச. 22-ம் தேதி சென்னையில் மிகப்பெரிய அளவில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட தேசியக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர். நல்லக்கண்ணு உள்ளிட்டோர் அதில் பங்கேற்றனர். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை'' என்றார்.

தொடர்ந்து, விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலர் க. சுந்தர்ராஜன், கட்டடத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலர் கே.ஆர். தர்மராஜன், இந்திய கம்யூனிஸ்ட கட்சியின் நகரச் செயலர் எம்.என். ராமச்சந்திரன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் க.சி. விடுதலைக்குமரன் ஆகியோர் பேசினர். சங்க நிர்வாகிகள் கே. சண்முகம், சொ. தங்கப்பா, எஸ். சுப்பிரமணியன், எம். முருகப்பன், டி. ரவிச்சந்திரன், கே. பிச்சையம்மாள், எஸ். ரெங்கசாமி, கே. நல்லதம்பி, எம். அருணாசலம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். உண்ணாவிரதத்தை ஏஐடியுசி மாவட்டச் செயலர் வீ. சிங்கமுத்து முடித்துவைத்தார்.

**பருத்தியில் வாடல் நோய்: வேளாண் அதிகாரி யோசனை**

First Published : 11 Feb 2010 03:58:25 AM IST

தேனி, பிப். 10: நுண்ணூட்டச் சத்துக் குறைவினால் பருத்தியில் காணப்படும் வாடல் நோயைக் கட்டுப்படுத்த மாவட்ட விவசாயத் துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

தேனி மாவட்டத்தில் பெரியகுளம், ஆண்டிபட்டி பகுதிகளில் பி.டி. ரக பருத்திகள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அறுவடை நிலையில் உள்ள பருத்தியில், பரவலாக இலைகள் சிவப்பு நிறமாக மாறி, பயிர்கள் வாடும் நிலையில் உள்ளன. இதனால் மகசூல் குறையும் என்று விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர்.

இது குறித்து, தேனி மாவட்ட விவசாய இணை இயக்குநர் நடராஜன் கூறியதாவது:

மக்னீசியம் நுண்ணூட்டச் சத்துக் குறைவால் பயிர்களில் வாடல் நோய் காணப்படுகிறது. இதை ஆரம்ப காலத்திலேயே கட்டுப்படுத்த விவசாயத் துறையால் தயாரித்து வழங்கப்படும் பருத்தி நுண்ணூட்டச் சத்து உரத்தை, நடவு செய்வதற்கு முன் ஏக்கருக்கு 5 கிலோ வீதம் மணல் அல்லது எருவுடன் கலந்து நிலத்தில் சீராகத் தூவ வேண்டும். இதனால் நுண்ணூட்டச் சத்துப் பற்றாக்குறை ஏற்படாமல் தவிர்க்கலாம்.

நுண்ணூட்டச் சத்து குறைவு ஏற்பட்டுள்ள பயிர்கள் மேலும் பாதிக்காமல் இருக்க, மக்னீசியம் சல்பேட் 5 கிராம், யூரியா 5 கிராம் ஆகியவற்றை ஒரு லிட்டர் நீரில் கரைத்து, ஏக்கருக்கு 200 லிட்டர் வீதம் கைத்தெளிப்பான் மூலம் பயிர்கள் நன்கு நனையும் வகையில் தெளிக்க வேண்டும்.

15 தினங்களுக்குப் பிறகு மீண்டும் இதே முறையில் மருóந்து தெளிக்க வேண்டும்.

இதனால் மகசூல் பாதிப்பைத் தவிர்க்கலாம் என்றார்.

**நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் தொழில்நுட்ப வார விழா**

First Published : 11 Feb 2010 07:06:07 AM IST

நீடாமங்கலம், பிப். 10: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 15-ம் தேதி முதல் 19-ம் தேதி வரை 5 நாள்கள் தொழில்நுட்ப வார விழா நடைபெறவுள்ளது. இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் தி. செங்குட்டுவன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் நடைபெற உள்ள இந்த விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் வேளாண் துறை,தோட்டக்கலைத் துறை, கால்நடைத் துறை,வேணாண்மை பொறியியல் துறை, வனத் துறை ஆகிய துறைகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர். தினமும் ஒரு சிறப்பு தலைப்பில் கருத்தரங்கமும், செயல்விளக்கங்களும் நடைபெறும்

**வேளாண் பல்கலை. கத்தரியையும் தடை செய்ய கோரிக்கை**

First Published : 11 Feb 2010 01:01:52 AM IST

சிதம்பரம், பிப்.10:  கோவை வேளாண் பல்கலைக்கழக உருவாக்கியுள்ள மரபீன மாற்றக் கத்தரியையும் தமிழக அரசு தடை விதிக்க வேண்டும் என தமிழக உழவர் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

÷இது குறித்து அம்முன்னணி ஆலோசகர் கி.வெங்கட்ராமன் தெரிவித்தது:

÷உழவர்கள், அறிவியலாளர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாநில அரசுகளின் கருத்துகளுக்கு மதிப்பளித்து பி.ட்டி கத்தரியை மத்திய அரசு தடை விதித்திருப்பது பாராட்டுகுரியது. இந்நிலையில் கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் உருவாக்கிய மரபீன மாற்றக் கத்தரி ஆபத்தில்லாதது. நமது விஞ்ஞானிகளின் சொந்த கண்டுபிடிப்பு, அதை விற்பனைக்கு வெளியிடப் போகிறோம் என சட்டப்பேரவையில்  தமிழக வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்திருந்தார்.

÷அதை முதல்வரும் உறுதி செய்திருந்தார். இது வெளிநாட்டு நிறுவனத்தின் பி.ட்டி கத்தரிக்கு உள்ளூர் முகமூடி அணிவிக்கும் முயற்சி என உழவர் முன்னணி எச்சரித்துள்ளது. தற்போது இந்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேசு 29.2.2009 அன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது.

÷மான்சன்டோ விதை நிறுவனமும், கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமும் 2005 மார்ச்சில் செய்து கொண்ட பொருள் மாற்ற உடன்படிக்கை சில ஐயங்களை எழுப்பி உள்ளது. பல்கலை. உருவாக்கும் புதிய மரபீன மாற்றக் கத்தரியையும், அதன் மரபணுவும், பிற பொருள்களும் இறுதியில் மான்சான்டோ நிறுவனத்துக்கே உடமையானது என்ற நிபந்தனை உள்ளது என மத்திய அமைச்சரின் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

÷கோவை பல்கலைக்கழகம் உருவாக்கும் மரபீன மாற்றக் கத்தரி என்ற பெயர் தாங்கி வந்தாலும் அது மான்சன்டோவின் பி.ட்டி கத்தரிதான் என்பது பொருள்.  எனவே வேளாண் பல்கலை. உருவாக்கும் மரபீன மாற்றுக் கத்தரியையும் தடை செய்ய வேண்டும். மத்திய அரசு பி.ட்டி பருத்தி உள்ளிட்ட மரபீன மாற்றப் பயிர்கள் குறித்து மீளாய்வு செய்ய வேண்டும் என கி.வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

**ரிசர்வ் வங்கியின் வீரியமற்ற மருந்து!**

பி.எஸ்.எம். ராவ்First Published : 11 Feb 2010 12:00:00 AM IST

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்தும் பல்வேறு இலக்குகள் ரிசர்வ் வங்கியின் மூன்றாம் காலாண்டு நிதிக் கொள்கை மறுஆய்வில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. உற்பத்தித் துறைகளுக்கு குறைந்த வட்டியில் வங்கிக் கடன்கள் கிடைக்கச் செய்வதன் மூலமும் பணவீக்கத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பதன் மூலமும் இந்த இலக்குகளை எட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த இலக்குகள் மிகச் சிறந்தவைதான். பொருளாதாரச் செழுமையையும், குறைந்த வட்டியில் அதிக வங்கிக் கடன்கள் கிடைப்பதையும், அத்தியாவசியப் பொருள்கள் விலை குறைவதையும் யார்தான் எதிர்ப்பார்கள்? ஆனால், நிர்ணயித்திருக்கும் இலக்குகளையெல்லாம் ரிசர்வ் வங்கி அடையப் போகிறதா என்பதுதான் கேள்வி.

பொருளாதார வளர்ச்சியும் நாட்டின் வளர்ச்சியும் ஒன்றுபோலத் தெரிந்தாலும் இவ்விரண்டும் வெவ்வேறானவை. பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது. நாட்டின் வளர்ச்சி அல்லது மேம்பாடு என்பது பொருளாதார வளர்ச்சியினால் கிடைக்கும் பலன்கள் மக்களைச் சென்றடையச் செய்வது.

பொருளாதார நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டு, நாட்டின் வளம் கொழிக்கும் அதே நேரத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் அதிகரித்துக் கொண்டே செல்லுமானால், அங்கு வளர்ச்சி இல்லையென்றுதான் பொருள்.

பொருளாதார வளர்ச்சியும், நாட்டின் வளர்ச்சியும் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் மாத்திரம் இல்லை. அவை, அரசின் பல்வேறு பொருளாதாரக் கொள்கைகளையும் சார்ந்தவை. ஆயினும், இந்த விஷயத்தில் ரிசர்வ் வங்கி முக்கியப் பங்காற்றுகிறது என்பதை மறுக்க முடியாது.

வங்கிக் கடன்களைக் கட்டுப்படுத்தும் பல்வேறு வகையான ஆயுதங்கள் ரிசர்வ் வங்கியிடம் இருக்கின்றன. அரசின் கொள்கையுடன் பொருந்திப் போகக் கூடியதாகத்தான் ரிசர்வ் வங்கியின் முடிவுகள் இருக்கும் என்றபோதிலும், இந்த ஆயுதங்களைக் கொண்டு தாம் நிர்ணயித்துள்ள இலக்குகளை ரிசர்வ் வங்கி அடைய முடியும் என்பது ஓரளவுக்கு உண்மைதான்.

இந்த ஆயுதங்களில் ஒன்றேயொன்றை மட்டும் ரிசர்வ் வங்கி தனது மூன்றாவது காலாண்டு நிதிக் கொள்கை மறுஆய்வில் பயன்படுத்தியிருக்கிறது. அதுதான் ரொக்கக் கையிருப்பு விகிதம்.

வங்கிகளுக்கான ரொக்கக் கையிருப்பு விகிதத்தை 0.75 அடிப்படைப் புள்ளிகள் அதிகரித்து ரிசர்வ் வங்கி இப்போது அறிவித்திருக்கிறது. ஆனால், இந்த அறிவிப்பு பிரமாஸ்திரம் போலச் செயல்பட்டு எல்லாவற்றையும் சரி செய்துவிடுமா? பார்க்கலாம்.

ரொக்கக் கையிருப்பு விகிதம் என்பது, வங்கிகள் தாங்கள் பல்வேறு வழிகளிலும் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கும் மொத்த டெபாசிட் தொகையில், ரிசர்வ் வங்கியிடம் இருப்பு வைத்திருக்க வேண்டிய விகிதமாகும். ஏற்கெனவே 5 சதவீதமாக இருந்த இந்த விகிதத்தை ரிசர்வ் வங்கி இப்போது 5.75 சதவீமாக அதிகரித்திருக்கிறது. பிப்ரவரி 13 முதல் 0.5 சதவீதம், பிப்ரவரி 27 முதல் 0.25 சதவீதம் என இரு கட்டங்களாக இந்த அதிகரிப்பு அமலுக்கு வருகிறது.

இந்த அதிகரிப்பால் கூடுதலாக ரூ. 36 ஆயிரம் கோடி நிதியை ரிசர்வ் வங்கியிடம் வங்கிகள் இருப்பு வைக்க வேண்டும். 5.75 சதவீதத்துக்கு ஒட்டுமொத்தமாக ரிசர்வ் வங்கியிடம் ரூ. 2 லட்சத்து 76 ஆயிரம் கோடி இருப்பு வைக்கப்பட்டிருக்கும்.

அதாவது, இப்போது கூடுதலாக இருப்பு வைக்கவேண்டிய ரூ.36 ஆயிரம் கோடி, வழக்கமான வங்கி வர்த்தக நடவடிக்கைகளுக்குக் கிடைக்காது. இந்தப் பணத்துக்கும் சேர்த்து வாடிக்கையாளர்களுக்கு வட்டி தர வேண்டியிருக்கும். கடந்த 2007-ம் ஆண்டுக்கு முன்புவரை ரிசர்வ் வங்கியிடம் இருப்பு வைக்கப்படும் தொகைக்கு 3 சதவீத வட்டியை ரிசர்வ் வங்கி வழங்கி வந்தது. அதன் பிறகு ரிசர்வ் வங்கியின் சட்ட விதிகள் திருத்தப்பட்டு வட்டி வழங்குவது நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி எந்த வட்டியையும் தராது.

ஆக, கூடுதலாக ரூ.36 ஆயிரம் கோடியைப் பயன்படுத்த முடியாமல் போகிறது என்பதுடன், அந்தப் பணத்துக்கு வாடிக்கையாளர்களுக்கு வட்டி வழங்குவதால் ஏற்படும் இழப்பையும் வங்கிகள் சந்திக்க நேரிடுகிறது. ஆனால், இந்த இழப்பு டெபாசிட் தொகையில் 0.1 சதவீதம் அளவுக்கே இருக்கும் என்பதால், வங்கிகளுக்குப் பெரிய சுமையாகத் தெரியாது. அதனால், மொத்த விளைவு பூஜ்யம்தான்.

ரொக்கக் கையிருப்பு விகிதம் உயர்த்தப்பட்டிருப்பது, வங்கிகளின் கடன் விரிவாக்கத் திட்டங்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது என ரிசர்வ் வங்கியே தெரிவித்திருக்கிறது. இது உண்மைதான். வங்கிகளிடம் ஏராளமான பணம் குவிந்து கிடக்கிறது. அந்தப் பணத்தை வேளாண்மை, வர்த்தகம், தொழில் போன்ற ஆக்கப்பூர்வமான துறைகளுக்குக் கடன் வழங்குவதற்காக வங்கிகள் பயன்படுத்துவதில்லை. கடன்கள் வழங்குவதில் வளர்ச்சி வீதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. கடந்த ஆண்டு 22 சதவீதமாக இருந்த வளர்ச்சி வீதம், இந்த ஆண்டில் 14.4 சதவீதமாகக் குறைந்திருக்கிறது.

உற்பத்தித் துறைகளுக்கு கடன் வழங்குவதற்குப் பதிலாக அரசுப் பங்குப் பத்திரங்களில் முதலீடு செய்வதைத்தான் வங்கிகள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றன. டெபாசிட்களில் 25 சதவீதத்தை அரசுப் பங்குப் பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டும் என்கிற விதி இருப்பது உண்மைதான். ஆனால், நடப்பில் தேவையைக் காட்டிலும் இந்த முதலீடு மிக அதிகமாக இருக்கிறது.

ரிசர்வ் வங்கியின் கடந்த ஜனவரி 15-ம் தேதி வரையான புள்ளிவிவரங்களின்படி, அரசுப் பங்குப் பத்திரங்களில் ரூ.13 லட்சத்து 80 ஆயிரத்து 187 கோடி அளவுக்கு வங்கிகள் முதலீடு செய்திருக்கின்றன. இது தேவையைவிட ரூ.3 லட்சத்து 19 ஆயிரம் கோடி அதிகமாகும். ஆக, ரொக்கக் கையிருப்பு விகிதத்தை அதிகரிப்பதால், ரிசர்வ் வங்கியிடம் இருப்பு வைக்க வேண்டிய ரூ.36 ஆயிரம் கோடியால் வங்கிக் கடன் வழங்குவதில் பெரிய மாற்றம் ஏற்படப்போவதில்லை என்பது உறுதியாகிறது.

ரொக்கக் கையிருப்பு விகிதம் உயர்த்தப்பட்டிருப்பதை பிளேஸ்போ மருத்துவச் சிகிச்சையுடன் ஒப்பிடலாம். பிளேஸ்போ சிகிச்சைப்படி நோயாளிக்கு மருந்துக்குப் பதிலாக சிறிய சர்க்கரை வில்லைகள் வழங்கப்படும். அது மருந்துதான் என நோயாளி நினைத்துக் கொண்டிருப்பார். அந்த நம்பிக்கையில் நோய் குணமாகும் என்பதுதான் பிளேஸ்போ சிகிச்சையின் தத்துவம். இது வெறும் நம்பிக்கையின் அடிப்படையிலானது. நோய் தீரும் என்பது உறுதியில்லை. தற்போது ரிசர்வ் வங்கி அளித்திருக்கும் ரொக்கக் கையிருப்பு விகிதச் சிகிச்சையும் இதைப் போன்றதுதான்.

உணவுப் பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருவதற்கு சப்ளை குறைவாக இருப்பதுதான் காரணம் என ரிசர்வ் வங்கியே ஒப்புக் கொண்டிருக்கிறது. அதாவது சப்ளை அதிகரிக்காதவரை பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாது என்று பொருள். அதேபோல, உலக அளவில் உணவுப் பொருள்களின் தொடர்ந்து விலை அதிகரித்துக் கொண்டிருப்பதால், பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டுவரும்படியாக வேளாண் பொருள்களை இறக்குமதி செய்வதும் சாத்தியமில்லாமல் போய்விட்டதாகவும் ரிசர்வ் வங்கி குறிப்பிட்டிருக்கிறது.

முந்தைய மதிப்பீடான 6 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் எனவும் ரிசர்வ் வங்கி மதிப்பிட்டிருக்கிறது. பொருளாதார வளர்ச்சிவீதம் அதிகரிக்கும்போது பணவீக்கமும் அதிகரிக்கும் என்பது பொதுக்கருத்து. அதன்படி, இப்போதும் பணவீக்கம் அதிகரிக்கத்தான் செய்யும் என்பது பொருளாகிறது.

கச்சா எண்ணெய் விலை உயரக்கூடும் என்கிற எதிர்பார்ப்பும், வேளாண் துறையில் இப்போது ஏற்பட்டிருக்கும் சுணக்கமும் பொருளாதாரச் சரிவில் இருந்து இந்தியா மீண்டு வருவதைப் பாதிக்கும் காரணிகள் என்பதை ரிசர்வ் வங்கி குறிப்பிட்டிருக்கிறது.

இந்த விஷயத்தில் அமெரிக்காவின் அவுட்சோர்சிங் நிறுவனங்களுக்கு வரிச்சலுகை ரத்து செய்யப்படும் என்கிற ஒபாமாவின் அறிவிப்பை ரிசர்வ் வங்கிக் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறதா எனத் தெரியவில்லை. இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐ.டி. துறை 6 சதவீதப் பங்களிப்பைச் செய்கிறது. ஆயினும் ஒபாமாவின் அறிவிப்பால், இந்தியாவில் அவுட்சோர்சிங் செய்யும் அமெரிக்க நிறுவனங்கள் பின்வாங்காது என நம்பப்படுகிறது. இதனால், பாதிப்பு மிகக் குறைவானதாகவே இருக்கும்.

ஆக, ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள இலக்குகளை எட்டுவதென்பது, அதன் கட்டுப்பாட்டில் இல்லாத வேறு பல காரணிகளையும் உள்ளடக்கியிருக்கிறது என்பது தெளிவாகிறது. அதேபோல், ரொக்கக் கையிருப்பு விகிதம் உயர்த்தப்பட்டிருப்பதும் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளைத் தரத் தவறக்கூடும். யார் கண்டது, வங்கிக் கடன்களுக்கு வட்டியை உயர்த்துவது போன்ற எதிர்விளைவுகள் கூட ஏற்படலாம்.

### செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கம்

First Published : 11 Feb 2010 01:09:03 AM IST

காஞ்சிபுரம், பிப். 10: நெல் விதை கிராம பயிற்சி முகாம் திருவாதூரில் நடைபெற்றது.

÷இம் முகாமில் விதை நேர்த்தி மற்றும் செம்மை நெல் சாகுபடி குறித்து செயல் விளக்கம் அளித்தனர். பவுஞ்சூர் வேளாண் உதவி இயக்குநர் வெ.சீத்தாரமன் இத் திட்டம் குறித்து விளக்கினார்.

÷திருவாதூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் ராணி தலைமை தாங்கினார். வேளாண் அலுவலர் ஜி.ஏழுமலை, உதவி விதை அலுவர் ஜி.கதிரேசன் உள்பட பலர் பங்கேற்றனர்.

### தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தால் விவசாயம் பாதிப்பு சிறு விவசாயிகள் புகார்

First Published : 11 Feb 2010 01:08:07 AM IST

காஞ்சிபுரம், பிப். 10: தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தொழிலாளர் மத்தியில் வரவேற்பை பெற்ற போதிலும் இத் திட்டத்தால் விவசாயப் பணிகள் பாதிக்கப்படுவதாக சிறு விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.

÷தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம் கூலித் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

ஆனால் இத் திட்டம் ஓரிரு ஏக்கர் நிலம் கொண்ட சிறு விவசாயிகளை பாதித்து விடுகிறது. நடவு, அறுவடை போன்ற பணிகளுக்கு ஆள் கிடைக்காமல் அவதிக்குள்ளாகி வருவதாக இவர்கள் கூறுகின்றனர்.

÷வேலை உறுதித் திட்டத்தில் வழங்கப்படும் அதே கூலியை தாங்கள் வழங்க முன் வந்தாலும் தொழிலாளர்கள் வேலைக்கு வர ஆர்வம் காட்டுவதில்லை. வேலை உறுதித் திட்டத்தில் பணி எளிதாக இருப்பதும் இதற்கு ஒரு காரணம் என விவசாயிகள் கூறுகின்றனர்.

பெரு விவசாயிகள் இயந்திரங்களை பயன்படுத்தி சமாளித்து விடுகின்றனர். அதிக அளவு பயிர் செய்வதால் அவர்களுக்கு விவசாயம் மூலம் கிடைக்கும் லாபம் கட்டுப்படி ஆகிறது. ஆனால் சிறு விவசாயிகள் கூலியாள்களையே சார்ந்துள்ள நிலை உள்ளது. இந்நிலையில் சிறு விவசாயிகள் பலர் தங்கள் நிலங்களை தரிசாக போட்டு வைத்துள்ளதாக கூறுகின்றனர்.

÷ஆண்டுக்கு நூறு நாள்தான் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எனவே நடவு, களை எடுப்பது, அறுவடை போன்ற விவசாயப் பணிகள் நடைபெறும் காலங்களைத் தவிர்த்து இத் திட்டத்தை செயல்படுத்துவது அவசியம். இதனால் விவசாயப் பணிகளும் பாதிக்கப்படாது, கூலித் தொழிலாளர்களுக்கும் அதிகம் சம்பாதிக்க வாய்ப்பு ஏற்படும் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

÷இது குறித்து மாத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் தமிழினியனிடம் கேட்டபோது அவர் கூறியது:

÷மனித உழைப்பு மூலம் செய்யவேண்டிய வேலையை இயந்திரங்களை கொண்டு செய்கின்றனர். இயந்திரங்களை கொண்டு செய்ய வேண்டிய வேலையை மனிதர்கள் செய்ய வேண்டும் என்று கூறுகின்றனர்.

÷தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஒரு ஒன்றியத்துக்கு ஆண்டுக்கு ரூ.4 கோடிவரை செலவிடப்படுகிறது. இத் தொகையை கொண்டு ஒரு பொக்லைன் வாங்கினால் அந்த ஒன்றியத்தில் உள்ள அத்தனை ஏரி, குளங்களையும் எளிதில் தூர் வாரிவிடலாம். நீர் நிலைகள் ஆழப்படுத்தப்பட்டால் விவசாயம் பெருகி தானாக வேலைவாய்ப்பு உருவாகிவிடும்.

அதே நேரம் இயந்திரத்தை பயன்படுத்த முடியாத இடங்களில் இத் திட்டப் பணிகளை செய்யலாம். குறைகளை களையாவிடில் இத் திட்டம் தோல்வியடையும் நிலை ஏற்படலாம் என்றார்.

### மானிய விலையில் கைத் தெளிப்பான்கள்

First Published : 11 Feb 2010 07:05:32 AM IST

வேதாரண்யம், பிப். 10: நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் வேளாண் துறை மூலம் மானிய விலையில் தைத் தெளிப்பான்களை விநியோகிக்கப்படுகின்றன.

இதுகுறித்து வேதாரண்யம் வேளாண் உதவி இயக்குநர் (பொ) ப.மணிகண்டன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

வேதாரண்யம் வட்டாரத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஐ.எஸ்.ஐ. முத்திரை தரச் சான்று பெற்ற 13 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆஸ்பி கைத் தெளிப்பான்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது.

இதன் விலை ரூ. 1850 ஆகும். ஆனால், ரூ. 800 மானியம் போக ரூ.1050-க்கு அளிக்கப்படுகிறது. வேதாரண்யம், கரியாப்பட்டினம், வாய்மேடு ஆகிய வேளாண் விரிவாக்க மையங்களில் போதிய அளவில் இவை இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தேவையுள்ள விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யும் திட்டம் தொடக்கம்

First Published : 11 Feb 2010 06:26:20 AM IST

நாகப்பட்டினம், பிப். 10: 300 அல்லது அதற்கும் மேற்பட்ட நெல் மூட்டைகளை வைத்திருக்கும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யும் சிறப்புத் திட்டம் நாகை மாவட்டத்தில் புதன்கிழமை தொடக்கப்பட்டது.

இதற்கான நிகழ்ச்சி, நாகை மாவட்டம், மயிலாடுதுறை சேந்தங்குடியில் நடைபெற்றது.

சிறப்பு கொள்முதல் குழுத் திட்டத்தைத் தொடக்கிவைத்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மா. வீரசண்முகமணி பேசியது:

நிகழாண்டில் விவசாயிகளின் இருப்பிடத்துக்குச் சென்று நெல் கொள்முதல் செய்யும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சுமார் 300 அல்லது அதற்கும் மேற்பட்ட (40 கிலோ எடையிலான) நெல் மூட்டைகள் விவசாயிகளிடம் விற்பனைக்கு இருந்தால், அவர்கள் அது குறித்தத் தகவலை நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல அலுவலகம் அல்லது அருகிலுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்துக்குத் தெரிவித்தவுடன், விவசாயியின் இருப்பிடத்துக்குச் சென்று அதிகாரிகள் நெல்லை கொள்முதல் செய்வர்.

டெல்டா மாவட்டங்களில் தற்போது 1,123 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

திறக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன. நிகழாண்டில் டெல்டா மாவட்டங்களிலிருந்து 12 லட்சம் டன் நெல்லும், பிற மாவட்டங்களிலிருந்து 4 லட்சம் டன் நெல்லும் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் இதுவரை 3.87 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களில் தினமும் சராசரியாக 30 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் பணிகளைக் கண்காணிக்கும் பணியில் 159 கொள்முதல் அலுவலர்களும், 17 உதவி மேலாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது முழு வீச்சில் நெல் கொள்முதல் நடைபெறுவதால், வரும் பிப்ரவரி மாத இறுதிக்குள் நெல் கொள்முதல் பணி நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார் வீரசண்முகமணி.

முன்னதாக, நாகை மாவட்டம், கொள்ளிடம், புத்தூர், அரசூர், அகணி, மயிலாடுதுறை ஆகிய பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையப் பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

நாகை மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன், நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் விஸ்வநாதன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**மக்காச்சோளம்: ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் வரை லாபம்**

First Published : 11 Feb 2010 12:00:00 AM IST



பயிரிடப்பட்டுள்ள மக்காசோளத்தை பார்வையிடும் விவசாயி.
உளுந்தூர்பேட்டை, பிப். 10: உளுந்தூர்பேட்டை பகுதி விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் அதிக லாபம் ஈட்டி வருகின்றனர்.

உளுந்தூர்பேட்டை வட்டம் பு.மாம்பாக்கம், மேப்புலியூர், மதியனூர், செங்குறிச்சி, வண்டிப்பாளையம், சின்னக்குப்பம், கிளியூர் உள்பட 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 3 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மக்காச்சோளம் பயிரிட்டு வருகின்றனர். இதைப் பயிரிடும் விவசாயிகள் தங்கள் நிலத்தை நன்கு உழுது கொள்ள

வேண்டும். பின்னர் நிலத்தில் கான்போட்டு விதைகளை ஊன்ற விட வேண்டும். நிலத்தில் நீர் தேங்கி நிற்காமல் வடிகால் வசதி செய்து கொள்ள வேண்டும்.

இதற்கு நீர் அதிகமாக பாய்ச்ச வேண்டிய அவசியம் இல்லை. நோய் தாக்குதல் தன்மை மிகவும் குறைவு என்பதால் மேலும் மருந்து அடிக்க வேண்டிய அவசியமும் ஏற்படாது.

அப்படி பயிர் செய்வதன் மூலம் ஏக்கருக்கு 25-30 குவிண்டால் மகசூல் கிடைக்கிறது. தற்போது மார்க்கெட்டில் மக்காச்சோளம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.800 முதல் ரூ.1000-ம் வரை விலை போகிறது. செலவு (சுமார் ரூ.6000) போக ஒரு ஏக்கருக்கு மூன்றை மாதத்தில் ரூ.20 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது.

பயன்: இந்த மக்காச்சோளக் கதிரை பச்சையாக இருக்கும்போது வேகவைத்து சாப்பிடவும், அதன் பின் ஆடு, மாடு மற்றும் கோழிகளுக்கு தீவனமாக பயன்படுகிறது. இந்த சோளத்தில் புரோட்டின் சத்து நிறைந்துள்ளதால் மாவாக அரைத்து சிற்றுண்டி உள்ளிட்ட உணவுப் பொருட்களுடன் பயன்படுத்தலாம். உண்பதற்கு சுவையாகவும், சத்து நிறைந்ததாகவும் உள்ளது. மேலும் குழந்தைகளுக்கு ஏற்ற சத்துணவாக பயன்படுத்தப்படுகிறது.

குறைந்த நாளில் நிகர லாபம் தரக்கூடிய மக்காசோளத்தை பயிரிடுவதற்கு மானியப் பொருள்களை வழங்கி வேளாண்துறை அலுவலர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினால் மக்கா சோளம் பயிரிடுவதற்கு பல விவசாயிகள் முன் வருவார்கள் என்கிறார்  தலைமையாசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்று விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கே.ராஜகோபால்.

### தரிசு நிலத்தில் பல்வகை பயிர் சாகுபடி

ஜி.சுந்தரராஜன்First Published : 11 Feb 2010 12:00:00 AM IST

சிதம்பரம், பிப். 10: இயற்கைச் சீற்றங்கள், தொழிலாளர் பற்றாக்குறை, தொழிற்சாலை  பாதிப்பு, நீதிமன்ற வழக்குகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பல லட்சம் ஏக்கர்  விளை நிலங்கள் தரிசாக வேளாண் உற்பத்திக்கு பயன்பட முடியாத நிலையில் உள்ளன.

இத்தகைய சூழலில் தரிசு நிலங்களை குறைந்த செலவில் எளிய தொழில் நுட்பங்களைக் கொண்டு மாற்ற, மகாராஷ்டிர மாநில முன்னோடி விவசாயி ஸ்ரீபாத தபோல்கர் புதிய விவசாய முறையை அறிமுகம் செய்து பல ஆயிரம் ஏக்கர் நிலங்களை 200 நாள்களில் வளம் பெறச் செய்துள்ளார். இம்முறையை தமிழக சிறு மற்றும் குறு விவசாயிகள் தெரிந்து கொள்வது அவசியமாகும் என அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத் துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்துள்ளார்.

தரிசு நிலத்தில் பயிர் வளர்ப்பு முறை: தமிழக விவசாயிகள் தரிசாக உள்ள தங்கள் நிலங்களில் ரசாயன உரங்களால் வளம் இழந்து போன நிலத்திலும், இயற்கை விவசாயத்திற்கு ஏற்ப தயார் செய்ய பயிர் வளர்ப்பு முறையில் ஈடுபட வேண்டியது அவசியம்.

இப்புதிய விவசாய முறையில் விவசாயிகள் ஒரு ஏக்கர் நிலத்தில் பட்டியலில் தொகுத்து கொடுக்கப்பட்டுள்ள பல்வகை பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும்.

இவ்வாறு பல்வேறு பயிர்களை தயார் செய்து விவசாயிகள் தங்களின் வளமிழந்த தரிசு நிலங்களில் நேரடியாக விதைப்பை மேற்கொள்ள வேண்டும். ஐந்து வகைப் பயிர்களும் நிலத்தில் நன்றாக வளர்ந்து 50 முதல் 60 நாள்களில், அவற்றை மடக்கி நிலத்தை உழவு செய்ய வேண்டியது அவசியம்.

இவையாவும் நன்றாக மட்கி, நிலத்தில் நுண்ணுயிர்களைப் பெருகச் செய்யும்.

இதன் மூலம் நிலத்தின் தன்மை வெகுவாக மாறி பல நுண்ணூட்டக் குறைபாடுகள் களைந்து 20 நாள்களிலேயே நிலம் நன்றாக வேளாண் சாகுபடிக்கு தயார் நிலையை அடைந்துவிடும்.

பிற பயன்கள்: வடமாநிலங்களில் விவசாய நிலங்களில் பல்வகை பயிர் வளர்ப்பு முறை வாயிலாக இயற்கை விவசாய முறைகள் அறிமுகம் செய்யப்பட்டு வெற்றிகரமாக உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் பெருக்கம் ஏற்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு பெரிதும் உதவியுள்ளது.

பல்வகை பயிர் வளர்ப்பு நிலத்தின் தன்மையை மாற்றி இயற்கை வளங்கள் வாயிலாக விவசாயிகள் குறைந்த செலவில், மனித உழைப்பில் தங்களின் தரிசு நிலங்களை வளங்காணச் செய்துள்ளது.

எனவே தமிழக விவசாயிகள் தங்களின் தரிசு நிலங்கள், வளமிழந்த நிலங்கள், தொழிற்சாலையால் மாசுபட்ட நிலங்கள் ஆகியவற்றை மேற்கண்ட பல்வகை பயிர் வளர்ப்பு முறையில் உழவு செய்து மாசுபட்ட நிலங்களை குறைந்த செலவில் மாற்றி இயற்கை வேளாண்மை வாயிலாக அதிக லாபம் பெறச் செய்ய முடியும் என்கிறார் விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன்.

**பயிர் வளர்ப்பு அட்டவணை**

தானிய வகைகளில் நான்கு: சோளம் 1 கிலோ, கம்பு 500 கிராம், தினை 250 கிராம், சாமை 250 கிராம்.

பயிறு வகைகளில் நான்கு: உளுந்து 1 கிலோ, பாசிப்பயிறு 1 கிலோ, தட்டைப்பயிறு 1 கிலோ, கொண்டைக்கடலை 1 கிலோ.

எண்ணெய் வித்துகளில் நான்கு: எள் 500 கிராம், நிலக்கடலை 2 கிலோ, சூரியகாந்தி-2 கிலோ, ஆமணக்கு 2 கிலோ.

பசுந்தாள் பயிறுகளில் நான்கு: தக்கைப்பூண்டு 2 கிலோ, சணப்பு 2 கிலோ, நரிப்பயிறு 500 கிராம், கொள்ளு 1 கிலோ.

நறுமணப் பயிறுகளில் நான்கு: கடுகு 100 கிராம், வெந்தயம் 250 கிராம், சீரகம் 250 கிராம், கொத்தமல்லி 1 கிலோ.

**நாற்றங்கால் பராமரிப்புக்கு எளிய ஆலோசனைகள்**

ந.குப்பன்First Published : 11 Feb 2010 12:00:00 AM IST



புதுச்சேரி, பிப். 10: பச்சிளங் குழந்தையைப் பராமரிப்பதும், நாற்றங்காலைப் பராமரிப்பதும் ஒன்றுதான்.

பிறந்த குழந்தைக்கு எதிர்ப்புச் சக்தி குறைவு. அதேபோன்றுதான் நாற்றுக்கும். நாற்றைப் பிடிங்கி வயிலில் நடும் வரை நாற்றுக்கு வலிமை குறைவுதான்.

பிறந்த குழந்தையை 3 ஆண்டுகளுக்குக் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். நாற்றங்காலில் வளரும் நாற்றை 30 நாள்களுக்குக் கவனமாக பார்த்துக் கொண்டால்தான் நெல் சாகுபடியில் அதிக மகசூல் எடுக்க முடியும். நாற்று நன்றாக இல்லையென்றால் நெல் பயிர் சரியாக வராது.

சொர்ணாவாரி, சம்பா, நவரை என்று 3 பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இப்போது சொர்ணாவரி பருவம். தட்பவெப்ப நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ள காலம். அதிக வெப்பம் இப்போது தலைகாட்டுகிறது. இது போன்று அதிக வெப்பம் இருக்கும் காலத்தில் நாற்றங்கால் தயார் செய்யும்போது பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கும் என்று புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் வல்லுநர் முனைவர் நி. விஜயகுமார் கூறுகிறார்.

நாற்றங்கால் பராமரிப்பு தொடர்பாக அவர் பல்வேறு எளிய நுணுக்கங்களைச் சொல்கிறார். குறைந்தச் செலவு, செலவே இல்லாத வழிமுறைகளாக அவை இருக்கின்றன.

உதாரணமாக இலைப்பேன் பூச்சி தாக்குதல் இருந்தால் தெளிந்த நீரை விசை தெளிப்பான் மூலம் 1 சென்ட் நாற்றங்காலுக்கு 1 லிட்டர் வீதம் நாற்றின் நுனியில் பீச்சி அடிக்க வேண்டும். பூச்சி செத்துவிடும். இது செலவு இல்லாத வைத்தியம். இலைப்பேன் பூச்சி தாக்கியிருந்தால் நாற்றின் நுனி மஞ்சள் நிறத்தில் இருக்கும். நாற்றின் 7 முதல் 10 நாள்கள் இந்தப் பூச்சித் தாக்குதல் காணப்படும். இதைத் தவிர 8 சென்ட் நாற்றங்காலுக்கு 100 மி.லி. வேப்ப எண்ணெண்ணெய் அடித்தால் போதுமானது. இது குறைந்தச் செலவில் பூச்சியைக் கொல்லும் உத்தி. பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டாம் என்பது இந்த நிபுணரின் அறிவுரை.

அதற்கு மாற்றாக காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் பிவேரியா பேசியானா என்ற உயிரி பூச்சிக்கொல்லி மருந்துகளை விற்பனை செய்து வருகிறது. இலை சுருட்டுப் புழு, இலை உண்ணும் புழுக்கள், குட்டைக்கொம்பு வெட்டுக் கிளி ஆகிய பூச்சிகள் நாற்றின் 10 முதல் 15 நாளில் தாக்கும் பூச்சிகள். இதைத் தடுக்க பிவேரியா பேசியானா உயிரி பூச்சிக்கொல்லி மருந்தை 2 கிராம் அளவுக்கு 1 லிட்டர் தண்ணீரில் கலந்து அடிக்க வேண்டும். இந்தப் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் பயன்படுத்தலாம்.

இதைத் தவிர 10 முதல் 20 நாளில் நாற்றைத் தாக்குவது பச்சை தத்துப்பூச்சி மற்றும்

பழுப்பு தத்துப்பூச்சி. இதற்கு பிவேரியா பேசியானா மருந்தை தெளிக்கலாம். இல்லையென்றால் சீத்தாப்பழக் கொட்டையின் சாறு எடுத்து தெளிக்கலாம். 8 சென்ட் நாற்றங்காலுக்கு 5 பழங்களின் கொட்டைகள் போதுமானவை.

செஞ்சிலந்தி என்ற பூச்சித் தாக்குதல் நாற்றில் 20 முதல் 25 நாள்களில் இருக்கும். இதைத் தடுக்க வேப்ப எண்ணெயைப் பயன்படுத்தலாம். டைகோபால் 100 மி.லி., அல்லது ஒரு கிலோ நனையும் கந்தகம் ஆகியவற்றை 8 சென்ட் நாற்றங்காலுக்கு அடிக்கலாம். இவை உரக்கடைகளில் கிடைக்கும்.

விளக்குப் பொறி

நாற்றங்காலில் டி வடிவத்திலான 20 குச்சிகளை நட்டு வைக்க வேண்டும். அந்தக் குச்சியில் காகம், பருந்து, கிளி, மைனா, ஆந்தை போன்ற பறவைகள் அமரும். அவை நாற்றங்காலில் தென்படும் புழு பூச்சிகளைப் பிடித்து சாப்பிடும். நாற்றங்காலில் விளக்குப் பொறி வைப்பதும் நல்லது. 8 சென்ட் நாற்றங்காலுக்கு ஒரு விளக்கு அமைத்தால் போதுமானது. அந்த வெளிச்சத்தை நோக்கி நாற்றில் இருந்து பூச்சிகள் வெளியே வந்துவிடும்.

மாலை 6 முதல் 10 மணி வரை விளக்கை எரிய விட்டால் போதுமானது. அதிக நேரம் எரிந்தால் வயலில் இருக்கும் நன்மை தரும் தும்பி, சிலந்தி, தரை வண்டு, குளவி, பொறி வண்டு, ஊசிதட்டான் போன்ற பூச்சிகள் அழிந்து விடும். எளிய வழிமுறைகளைப் பயன்படுத்தி நாற்றைப் பாதுகாத்து வயலில் நட்டால் விவசாயிகள் நல்ல விளைச்சல் காணலாம்.

## பி.டி.கத்தரிக்கு அனுமதி மறுப்பு: விவசாயிகள் வரவேற்பு

First Published : 11 Feb 2010 06:41:17 AM IST

கோவை, பிப்.10: மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி.கத்தரிக்காயை வர்த்தக ரீதியில் பயிரிடுவதற்கு அனுமதிப்பதில்லை என்ற மத்திய அரசின் முடிவை கோவை விவசாயிகள் வரவேற்றுள்ளனர்.

பொதுமக்களும், விவசாயிகளும் கடும் எதிர்ப்பு தெரிவிப்பதால், பி.டி. கத்தரிக்காய்களை அனுமதிக்க முடியாது என மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளனர். மத்திய அரசின் இந்த முடிவு பி.டி கத்தரிக்காய்க்கு மட்டும் பொருந்தும் என்றும், வருங்காலத்தில் வர உள்ள மரபணு மாற்றம் செய்யப்பட்ட வெண்டைக்காய், நெல், முட்டைகோஸ், தக்காளி

ஆகியவற்றுக்கு பொருந்தாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க (கட்சி சார்பற்றது) கோவை மாவட்டத் தலைவர் வழுக்குப் பாறை பாலு கூறியது:

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி.கத்தரிக்காய்க்கு அனுமதி மறுக்கும் மத்திய அரசின் முடிவை வரவேற்கிறோம். ஆனால், மரபணு மாற்றம் செய்யப்பட்ட மற்ற பயிர்களுக்கு இந்த முடிவு பொருந்தாது என மத்திய அரசு தெரிவித்து இருப்பது ஏமாற்றத்தை அளிக்கிறது.

மரபணு மாற்றுப் பயிர்கள் மனித உடலுக்கு ஊறுவிளைவிக்காது என வேளாண் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவர்களது பேச்சில் விவசாயிகளுக்கு நம்பிக்கை இல்லை.

மண்ணுக்கும், மனிதனுக்கும் கேடு விளைக்கும் தன்மை கொண்டதாகக் கருதப்படும் மரபணு மாற்று பயிர்களை எக்காரணத்தைக் கொண்டும் அறிமுகம் செய்யக் கூடாது என்றார்.

கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் என்.எஸ்.பழனிசாமி:பல ஐரோப்பிய நாடுகளிலேயே தடை செய்யப்பட்டுள்ள பிடி ரக பயிர்களை இந்தியாவில் அறிமுகம் செய்ய அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் சதி செய்கின்றன.

பிடி ரக பயிர்கள் அறிமுகம் செய்யப்பட்டால், விதைக்காக பன்னாட்டு

நிறுவனங்களிடம் விவசாயிகள் கையேந்தும் அவல நிலை ஏற்படும். பிடி கத்தரியை அனுமதிக்க மத்திய அரசு மறுத்து இருப்பது ஆறுதல் அளிக்கிறது. அதே சமயம், மரபணு மாற்றம் செய்யப்பட்ட வெண்டைக்காய், நெல், முட்டைகோஸ், தக்காளி ஆகிய பயிர்களுக்கு இந்தத் தடை பொருந்தாது என்ற மத்திய அரசின் அறிவிப்பு வேதனையை அளிக்கிறது என்றார்.

**வீழ்ச்சியில் தக்காளி விலை: விரக்தியில் விவசாயிகள்!**

First Published : 11 Feb 2010 06:40:58 AM IST

கோவை, பிப்.10: தக்காளி விலை பெரும் வீழ்ச்சியை கண்டுள்ளதால், கடும் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய இக்கட்டான சூழலில் தவித்து வருகின்றனர் கோவை விவசாயிகள்.

சில மாதங்களுக்கு முன், தக்காளியின் விலை மளமளவென ஏறியதால், பெரும்பாலான விவசாயிகள் ஆப்பிள், நாட்டு ரக தக்காளியை விரும்பி சாகுபடி செய்தனர். தக்காளி செடிகளுக்கு தகுந்த குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவுவதால், தக்காளியின் மகசூல் பன்மடங்கு அதிகரித்தது.

தக்காளியின் வரத்தை பொறுத்து, அதன் விலையை நிர்ணயிக்கும் மையங்களாக

நாச்சிபாளையம், கிணத்துக்கடவு, வேலந்தாவளம் ஆகிய சந்தைகள் திகழ்கின்றன.

தற்போது இந்தச் சந்தைகளுக்கு வழக்கமாக வரக்கூடிய தக்காளியின் வரத்து இருமடங்காக அதிகரித்துள்ளது. இதனால், தக்காளியின் விலை கடுமையான வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

15 கிலோ தக்காளி, தரத்துக்கேற்ப ரூ.5 முதல் ரூ.40 வரை விற்பனையாகிறது. இதனால், ஒரு கிலோ தக்காளிக்கு 30 பைசா முதல் ரூ.2.5 வரைதான் விலை கிடைப்பதாக வேதனைப்படுகின்றனர் விவசாயிகள்.

"கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் தக்காளி நல்ல விலையில் விற்பனையானது. அப்போது போட்ட முதலுக்கு மேல் சிறிது லாபம் கிடைத்தது. தற்போது ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சி காரணமாக, முதல் கூட கிடைக்காமல் பெரும் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய சூழல் நிலவுகிறது.

தக்காளி விலை சரிவால் கடந்த மாதம் மட்டும் எனக்கு ரூ.1.5 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தக்காளி சாகுபடியில் ஈடுபட்ட பெரும்பாலான விவசாயிகள் நஷ்டத்தைத் தவிர

வேறெதையும் சம்பாதிக்கவில்லை. தக்காளி விற்பனை மூலம் கிடைக்கும் தொகையானது போக்குவரத்து செலவிற்கு கூட கட்டுப்படி ஆவதில்லை' என்கிறார் தமிழக விவசாயிகள் சங்க (கட்சிசார்பற்றது) கோவை மாவட்டத் தலைவர் வழக்குப் பாறை பாலு.

"சமீபகாலமாக, ஓசூர், பெங்களூரில் இருந்து வரும் தக்காளியின் வரத்து அதிகரித்து வருகிறது. இதுவும் விலை வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது.

கோடை காலத்தில் தக்காளியின் மகசூல் குறையும். அதனால், ஏப்ரல், மே மாதங்களில் தக்காளிக்கு மீண்டும் நியாயமான விலை கிடைக்கும்' என்று நம்பிக்கையூட்டுகிறார் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் என்.எஸ்.பழனிசாமி.

விலை வீழ்ச்சி ஏற்படும் காலங்களில் உபரி தக்காளி வரத்தை குளிர்சாதன கிடங்குகளில் சேமிக்கலாம். தக்காளி சந்தைகள்தோறும் குளிர்சாதன கிடங்குகளை அமைத்து, "விலை வீழ்ச்சி' என்ற கோரப் பிடியில் இருந்து விவசாயிகளை தமிழக அரசு காத்திட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

## சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

First Published : 11 Feb 2010 01:03:49 AM IST

திருத்தணி, பிப். 10: ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் செஞ்சுருள் சங்கம் சார்பில் மாணவர்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றுது.

திருத்தணி - அரக்கோணம் நெடுஞ்சாலையில் ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியின் ஜெயா கல்வி அறக்கட்டளையின் செஞ்சுருள் சங்கம் சார்பில் கல்லூரி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிகழ்ச்சியில் ஆங்கில விரிவுரையாளர் பாக்கியமேரி வரவேற்றார். விரிவுரையாளர் நிர்மலா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் டி.எம். குமரேசன் தலைமை வகித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படும் வகையில் உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராக சென்னை அண்ணா பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் முனைவர் ஜெ. ஜெயச்சந்திரன் கலந்து கொண்டு பேசினார். மேலும் மாணவர்கள் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை தங்கள் உரைகள் மூலமும், நாடகங்கள் மூலமும் வெளிப்படுத்தினர்.

இந்தியாவின் ஒற்றுமையைப் போற்றும் வகையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

First Published : 11 Feb 2010 01:02:06 AM IST

திருவள்ளூர், பிப். 10: திருவள்ளூரில் அகில இந்திய விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

மாநில பொதுச் செயலாளர் சண்முகம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு,

அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்க மாநில பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு, தோழர்கள் ஆறுமுகம், செல்வராஜ், அப்சல்அகமது உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது, திருவள்ளூர் மாவட்டம், காவேரி ராசபுரம் கிராமத்தில் ஆக்கிரமித்துள்ள அரசு புறம்போக்கு நிலங்களை மீட்டு அக்கிராமத்தில் உள்ள தலித், இருளர், அருந்ததியர் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என கோரி கோஷம் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் விவசாயத் தொழிலாளர் சங்க மாநிலச் செயலாளர் தயாநிதி, மாநிலக்குழு உறுப்பினர் சுந்தர்ராஜன், சிபிஎம் மாவட்டச் செயலாளர் செல்வராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

தினமலர்

**பெட்ரோல், டீசல் விலை உயர்வால் பணவீக்கம் அதிகரிக்கும்**
பிப்ரவரி 11,2010,02:30



சந்தை ஏற்றமும், இறக்கமும் கொண்டதாகவே இருக்கிறது. திங்கள், செவ்வாயின் லாபங்களை, புதன் சரிக்கட்டி விட்டது. திங்களன்று மும்பை பங்குச் சந்தை மிகக் குறைவான லாபமான, 20 புள்ளிகளில் முடிந் தது. நேற்று முன்தினம் சந்தை சிறிது நிமிர்ந் தது. அதாவது, உலகளவில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னைகளில் சிறிது தளர்வு தான் காரணம். ஐரோப்பாவில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் சரிசெய்யக் கூடியவை தான், அவை பல நாடுகளுக்கும் பரவும் அபாயம் இல்லை என்ற செய்திகள் சந்தையை மகிழ் வித்தன. ஆதலால், மும்பை பங்குச் சந்தை 107 புள்ளிகள் கூடி முடிந்தது. நேற்று வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகம் விற்றதால், சந்தை கீழே விழுந்தது. சமீபத்தில் அவர்கள் விற்பது தொடர்கதையாகிவிட்டது. பட்ஜெட்டுக்கு பிறகு வாங்குவார் கள். ஆதலால், நேற்று இறுதியாக மும்பை பங் குச் சந்தை 120 புள்ளிகள் குறைந்து, 15,922 புள்ளிகளுடனும், தேசிய பங்குச் சந்தை 35 புள்ளிகள் குறைந்து 4,757 புள்ளிகளுடனும் முடிந்தது.

அரசின் சலுகைகள்: கடந்த இரண்டு ஆண்டுகளாக பல நாடுகளும் பலவிதமான சலுகைகளை அறிவித்து வந்தன. அதாவது, நாட்டின் நலனைக் கருதி அரசின் பணம் பல லட்சம் கோடி ரூபாய் செலுத்தப்பட்டது, பலவிதமான சலுகைகள் வழங்கப்பட்டன. தற்போது பல நாடுகளின் நிலைமை திருப்திகரமாக உள்ளது. ஆதலால் அந்த சலுகைகளை திருப்பப் பெற வேண்டும், இல்லாவிடில் அது இன்னொரு நீர்க்குமிழிக்கு காரணமாகி விடும் என்று மார்கன் ஸ்டான்லியின் தலைவர் ரோச் கூறியுள்ளார். ஆனால், இந்தியாவில் சலுகைகள் எல்லாம் படிப்படியாக தான் குறைக்கப்படும், ஒரேயடியாக குறைக்கப்படாது என அறிவிக்கப் பட்டுள்ளது. மேலும், இந்தியா, சீனாவை விட சிறப்பாக பரிணமிக்கும் என்றும் கூறியுள்ளார்.

சந்தைக்கு கேட்கிறதா? கூடப்போகும் பெட்ரோல், டீசல் விலை: பெட்ரோல், டீசல் விலை கூடவுள்ளதாக அறிவிப்புகள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால், இதற்கெல்லாம் பயப்படாமல் கார்கள் விற்பனை கூடிக்கொண்டே செல்கிறது. ஜனவரி விற்பனையும் கூடியுள்ளது. கார்கள் என்ன தண்ணியிலா ஓடுகிறது? பெட்ரோல், டீசல் விலை உயர்வு நிச்சயம் பணவீக்கத்தை அதிகரிக்கும். சந்தைக்கும் அபாயம் தான்.

புதிய வெளியீடுகள்: அரசு கம்பெனியான கோல் இந்தியா, தனது புதிய வெளியீடை கொண்டு வரவுள்ளது என்ற செய்தி வந்ததை அடுத்து, பல அரசு கம்பெனிகளின் பங்குகள் சரசரவென கூடின. குறிப்பாக இன்ஜினியர்ஸ் இந்தியா, இந்துஸ்தான் காப்பர், டிரெட்ஜிங் கார்ப்பரேஷன் போன்றவை. சமீபத்தில் வெளியிடப்பட்ட புதிய வெளியீடான டெமினோஸ் பிட்சாவின் இந்திய துணை நிறுவனத்தின் பங்குகள் சந்தையில் பட்டியலிடப்பட்ட போது 58 சதவீதம் பிரிமியத்தில் சென்று முடிந்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது, பிட்சாவிலும் பணம் பண்ணலாம்.

வரும் நாட்கள் எப்படி இருக்கும்? திங்கள், செவ்வாய் என சிறிது நிமிர்ந்த சந்தை நேற்று பெரிதாக சரிந்து, இன்னும் சரிவு இருக்கிறது என்று கோடிட்டு காட்டி விட்டு சென்றுள்ளது. பட்ஜெட்டுக்காக காத்திருக்கிறது பங்குச் சந்தை.

சேதுராமன் சாத்தப்பன்

### பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் பிரணாப் நம்பிக்கை

பிப்ரவரி 11,2010,02:29



புதுடில்லி: 'இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறித்து, மத்திய புள்ளியியல் துறை தெரிவித்த அளவான, 7.2 சதவீதத்தை விட அதிகரிக்கலாம்' என, அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சி குறித்த கூட்டத்தில் பேசிய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியதாவது: பொருளாதார வளர்ச்சி பற்றிய மூன்றாவது காலாண்டு தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன. இதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதமாக இருக்கும் என, மத்திய புள்ளியியல் துறை முன் தெரிவித்திருந்ததை விட அதிகரிக்கலாம் என்பது என் கருத்து. எனினும்,

தற்போதைய நிலையில், 7.2 சதவீதம் வளர்ச்சி என்பது மோசமானது அல்ல. நாட்டின் பொருளாதார வளர்ச்சி, நிபுணர்கள் கணக்கிட்டுள்ளதை விட அதிகமாகவே இருக்கும். பொருளாதார நெருக்கடியை சமாளிக்க, குறிப்பிட்ட காலத்தில், இந்தியா கொள்கை நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பதையே, நாட்டின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி காட்டுகிறது. இவ்வாறு பிரணாப் கூறினார்.

நாட்டின் மொத்த பொருளாதார வளர்ச்சி கடந்த ஐந்தாண்டுகளில் இருந்ததை விட, 2.1 சதவீதம் குறைந்து, கடந்த நிதியாண்டில், 6.7 சதவீதமாக இருந்தது. 2008ம் ஆண்டு, செப்டம்பரில், லேமன் பிரதர்ஸ் நிறுவனம் திவாலானதைத் தொடர்ந்து, உலகப் பொருளாதார மந்த நிலை தீவிரமானது. இதை சமாளிக்க, அரசு பல்வேறு விதமான ஊக்கச் சலுகைகளை வழங்கியது. இதையடுத்து, பொருளாதார நிலை சீரடைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**நீர் நிலைகளை காப்பாற்ற அழைப்பு**

பிப்ரவரி 11,2010,00:00 IST



ஜம்மு : "ஜம்மு காஷ்மீரில் காணப்படும் நீர் நிலைகள் மாசடையாமல் பாதுகாக்க வேண்டியது அவசியம். அதற்கான பணிகளில் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும்' என, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்தார்.

ஜம்முவில் அமைந்துள்ள பள்ளி ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் கூறியதாவது: மாநிலத்தில் அமைந்துள்ள நீர்நிலைகளை மாசுபடுவதில் இருந்து காப்பாற்ற அனைவரிடமும் விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை சேர்ந்த மக்களுக்கு, ஆறுகள், மலைகள் மற்றும் மேய்ச்சல் நிலங்கள் என, பல்வேறு வகையான பரிசுகள் கிடைத்துள்ளன. எனவே, இவற்றை பாதுகாக்க மாணவர்கள் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். இவ்வாறு குலாம் நபி ஆசாத் கூறினார்.

## செம்மை நெல் சாகுபடியில் விளைச்சல் அதிகரிப்பு: வீரபாண்டி ஆறுமுகம் பேச்சு

பிப்ரவரி 11,2010,00:00 IST



குறிஞ்சிப்பாடி : செம்மை நெல் சாகுபடியால் எக்டேருக்கு 2 ஆயிரத்து 500 கிலோ கூடுதலாக விளைச்சல் கிடைப்பதாக வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசினார். கடலூர் மாவட்டம், வடலூரில் 25 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பத்திரப்பதிவு சார்பதிவாளர் அலுவலகத்தை திறந்து வைத்து வேளாண் அமைச் சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசியதாவது: விவசாய துறையில் புதிய தொழில் நுட்பங்களை புகுத்துவதிலும், பல சலுகைகளை அறிவிப்பதிலும் முதல்வர் ஆர்வம் காட்டி வருகிறார். செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை பயன் படுத்தி கடலூர் மாவட்டத்தில் 64 ஆயிரம் எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு எக்டேருக்கும் 2,500 கிலோ நெல் கூடுதலாக கிடைத்துள்ளது. சிறு விவசாயிகளுக்கு உதவிடும் பொருட்டு துள்ளிய பண்ணை திட்டத்தில் வழங்கி வந்த 50 சதவீத மானியத்தை தற்போது 65 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது. ஜெ., ஆட்சியில் கரும்புக்கு மத்திய அரசு அறிவித்த ஆதார விலையான 745 ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. 2006ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் மாநில அரசுகள் கரும்புக்கு ஆதார விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என தீர்ப்பு வழங்கியது. அதன் அடிப்படையில் டன் கரும்பிற்கு ஆயிரத்து 14 வழங்க அறிவிப்பு மட்டும் தான் வந்தது. ஆனால் வழங்கவில்லை. கருணாநிதி ஆட்சியில் தான் கரும்பு டன் ஒன்றுக்கு ஆயிரத்து 520 ரூபாய் வழங்கப்படுகிறது. நெல் குவிண்டால் (சாதாரண ரகம்) ஆயிரத்து 50 ரூபாய், சன்ன ரகம் ஆயிரத்து 100 ரூபாய் வழங் கப்படுகிறது என்றார்.

விழாவில், பத்திரப்பதிவு தணிக்கை அதிகாரி ஜெயவேல், துணைப்பதிவாளர் சுந்தரேசன், தாசில்தார் பெரியநாயகம், வடலூர் வட்டார மருத்துவ அதிகாரி லட்சுமி சீனுவாசன்,ஒன்றிய செயலாளர் சிவக்குமார், வள்ளலார் குருகுலம் பள்ளி தாளாளர் செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கிணத்துக்கடவில் தர்ப்பூசணி படுஜோர்

கிணத்துக்கடவு: கிணத்துக்கடவில் ஒரு வாரமாக கோடை வெயில் சூட்டெரிக்க துவங்கியது. இதனால், இப்பகுதியில் இளநீர் கடைகளில் வியாபாரம் சூடுபிடித்து வந்தது. தற்போது, தர்ப்பூசணி கடைகள் அதிகளவில் திறக்கப்பட்டுள்ளது. திண்டிவனம் பகுதியில் இருந்து ஒரு லோடு தர்ப்பூசணி பழம் 12 ஆயிரம் ரூபாய்க்கு எடுத்து வந்தது. ஒரு கிலோ தர்ப்பூசணி பழம் ரூ.12க்கும், 200 கிராம் எடையுள்ள கீத்து ஐந்து ரூபாயுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.வெயில் சூடு தாங்க முடியாத பொதுமக்கள் தர்ப் பூசணி கடைகள் பக்கம் நின்று தர்ப்பூசணி பழங் களை வாங்கி சாப்பிட்டும், தர்பூசணி பழங்களை வாங்கியும் செல்ல துவங்கிவிட்டனர். இதனால், தர்ப் பூசணி பழம் வியாபாரம் சூடுபிடிக்க துவங்கியுள்ளது.

### உழவர் மன்றத்தில் மண் பரிசோதனை

பொள்ளாச்சி: கொல்லம்பட்டி இமயம் உழவர் மன்றம் சார்பில் மண் பரிசோதனை முகாம் நடந்தது. மன்ற செயலாளர் முருகபாண்டியன் தலைமை வகித்தார். பொள்ளாச்சி வடக்கு தோட்டக்கலைத்துறை அலுவலர்

அப்ரோஸ் பேகம், உதவி அலுவலர் முருகன் விவசாயிகளிடமிருந்து மண் மாதிரிகளை பெற்றனர்.தோட்டக்கலைத்துறை அலுவலர் அப்ரோஸ் பேகம் பேசியதாவது:நிலத்திலுள்ள சத்துக்களை கட்டாயம் விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லா நிலத்திற்கும் பொதுவான உரமிடல் கூடாது. மண்ணிலுள்ள சத் துகள் அளவை தெரிந்து பயிறுக்கு தேவையான சத்து பற்றாகுறையை நிவர்த்தி செய்ய வேண் டும். குறைந்த உர செலவில் அதிக மகசூல் பெற முடியும். எல்லா விவசாயிகளுக்கு இதன்மூலம் பயன் பெற முடியும்.இவ்வாறு, தோட்டக்கலைத்துறை அலுவலர் பேசினார்.இதில், மொத்தம் 97 விவசாயிகளிடமிருந்து மாதிரி மண் பரிசோதனைக்காக பெறப் பட்டது.

**நெகமம் கொப்பரை ஏலம் ஒரு கிலோ 33.60 ரூபாய்**

பொள்ளாச்சி: நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 33.60 ரூபாய் விலை கிடைத்தது.நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 12 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 60 மூட்டை கொப்பரையை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். மொத்தம் நான்கு வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 35 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 30.80 ரூபாய் முதல், அதிகபட்சம் 33.60 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 25 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 24.25 ரூபாய் முதல், அதிகபட்சம் 27 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறுகையில், "வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை குறைந்துள்ளதால், தற்போதுள்ள தேங்காயை கொப்பரை உற்பத்தியாளர்கள் இருப்பு வைத்துள்ளனர். இதனால் நெகமத்திற்கு இந்தவாரம் கொப்பரை வரத்து குறைவாக உள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது வரத்து 50 சதவீதம் குறைந்துள்ளது. ஆனால் கொப்பரை விலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை' என்றனர்

**கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை**

பொள்ளாச்சி: தமிழ்நாடு கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பொள்ளாச்சி கோட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில் பொள்ளாச்சி அடுத்த ஆலாம்பாளையத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. கோவை நோய் புலனாய்வு துறை டாக்டர் செல்வராஜ் முகாமை துவக்கி வைத்தார். கிளை மருத்துவமனை டாக்டர்கள் ராஜேந்திரன், பாரிவேந்தன், உதவி ஆய்வாளர் ஆல்துரை கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். 220 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியும், 186 கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் தடுப்பூசியும் போடப்பட்டது. 260 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம், 42 பசுகளுக்கு பொது சிகிச்சையும், 12 மாடுகளுக்கு மலடு நீக்க சிகிச்சையும், 20 பசுகளுக்கு செயற்கை முறை கருவூட்டலும், 10 கிடேறி கன்றுகளுக்கு பரிசும் வழங்கப்பட்டது.அடுத்த முகாம், பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட கூளநாயக்கன்பட்டி ஊராட்சியில் பிப்., 16ம் தேதி நடக்கிறது.இத்தகவலை பொள்ளாச்சி கோட்ட கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் டாக்டர் நாகராஜன் தெரிவித்தார்.

**விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம் ஜி.ஆர்.டி., கல்லூரியில் கருத்தரங்கு**

கோவை : அவினாசிரோட்டிலுள்ள ஜி.ஆர்.டி., அறிவியல் கல்லூரி பயோடெக்னாலஜித்துறை சார்பில் "விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களின் பங்கு' என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடந்தது.கல்லூரி பயோடெக்னாலஜித்துறை தலைவர் சுகந்தி வரவேற்றார். முதல்வர் பொன்னுசாமி தலைமை வகித்தார். கனடா நாட்டு ஆல்பர்ட்டா பல்கலை விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத்துறை அசோசியேட் டீன் நாட்கேவ், மரபணு மாற்றம் பற்றி பேசினார்.நோய் தாக்குதலுக்கு ஆளாகாத வகையில் அவர் கண்டுபிடித்துள்ள "கனோலா' செடியின் சிறப்பு, உருவாக்கிய முறைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கினார்.
கல்லூரி பயோடெக்னாலஜி, மைக்ரோ பயோலஜி மற்றும் பயோகெமிஸ்ட்ரி உள்ளிட்ட துறைகள் இணைந்து இக்கருத்தரங்கு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் பலர் பங்கேற்றனர். பயோடெக்னாலஜித்துறை மாணவர் விவேக் நன்றி கூறினார்.

**விவசாயிகள் குறைகேட்பு**

கடலூர் : மாவட்ட  விவசாயிகள் குறைகேட்பு  கூட்டம் கடலூர் வேளாண் இணை இயக் குனர் அலுவலகத்தில் நாளை நடக்கிறது.
தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற் றும் வணிகம், விதைச் சான்று, மின் வாரியம், கால் நடை பராமரிப்பு, பொதுப்பணித்துறை யைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொள் கின்றனர். விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு குறைகளை தெரிவிக்கலாம்.

**நெல் விலை வீழ்ச்சி: உழவர் முன்னணி கோரிக்கை**

காட்டுமன்னார்கோவில் : தமிழகத்தில் நெல் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் துயர் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது குறித்து தமிழக உழவர் முன்னணி மாவட்ட செயலர் ஆறுமுகம் விடுத்துள்ள அறிக்கை: சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் அறுவடை செய்யப்படும் நெல்லை வியாபாரிகள் கடந்த ஆண்டை விட குறைந்த விலைக்கு கொள்முதல் செய்து வருகின்றனர். கடந்தாண்டு 60 கிலோ பி.பி.டி நெல் 850 ரூபாய்க்கு விற்பனை ஆனது. இந்த ஆண்டு 730 ரூபாயில் இருந்து 740 ரூபாய் வரை விற்கப்படுகிறது. மத்திய, மாநில அரசுகள் நெல்லுக்கான குறைந்தபட்ச விலையை குவிண்டாலுக்கு 1500 ரூபாய் என அறிவித்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது.
இயற்கை சீற்றம் மற்றும் விலை யேற்றம் என அனைத்து முனைகளிலும் நெருக்கடிகளை சந்தித்த விவசாயிகள் விளைந்த நெல்லுக்கு அடிமாட்டு விலை வழங்குவது விவசாயிகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி உள் ளது. இதுபோன்ற பிரச்னைகளில் சிக்கியுள்ள விவசாயிகளை பாதுகாத்திட தமிழக அரசு நெல் கொள்முதல் விலையை குவிண்டால் 1500 ரூபாய் என அறிவிக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**செண்டுமல்லி,அரளி பூக்கள் விலை உயர்வு**

திண்டுக்கல்: சிவராத்திரி,அமாவாசையை முன்னிட்டு, நேற்று பூக்களின் விலை அதிகரித்திருந்தது.கடந்த இரண்டு வாரங்களாக அனைத்து பூக்களும் வரத்து குறைந்திருந்தபோதும், பண்டிகை, முகூர்த்த நாட்கள் இல்லாததால் விலை குறைந்திருந்தன. திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் நேற்று முன்தினம் ஒரு கிலோ செண்டுமல்லி மூன்று ரூபாய்க்கும், அரளி 30 ரூபாய்க்கும் விற்றது. மார்ச் 13ல் சிவராத்திரி கொண்டாடப்படுவதாக, முக்கிய கோயில்கள் சார்பில் அறிவிக்கப்பட் டுள்ளன. இருப்பினும் கிராம, குல தெய்வ கோயி ல்களில், பலர் நாளை சிவராத்திரி வழிபாடு நடத்த உள்ளனர். பிப். 13ல் அமாவாசை தினமாக உள்ளது.இந்நிலையில் சரிவில் இருந்த பூக்களின் விலை, நேற்று அதிகரிக்கத் துவங் கியுள்ளது. முன்னதாக மூன்று ரூபாய்க்கு விற்கப் பட்ட செண்டுமல்லி 25 ரூபாய்க்கும், 30 ரூபாயாக இருந்த அரளி 80க்கும் விற்பனையானது. மல்லிகை 300,கனகாம்பரம் 280,சம்மங்கி 80, ஜாதிப் பூ 300, காக்கரட்டான் 150, செவ்வந்தி 50 என முன்பை விட ஓரளவு விலை அதிகரித்திருந்தன.

**கொத்தவரை விலை சரிவு**

ஒட்டன்சத்திரம்: வரத்து அதிகரித்துள்ளதால் ஒட்டன்சத்திரத்தில் கொத்தவரை விலை குறைந்துள்ளது. பொருளூர், புளியம்பட்டி, செம்மடைப்பட்டி உள்ளிட்ட கிராமப்பகுதிகளில் கொத்தவரை அறுவடைசெய்யப் படுகிறது.நேற்று கொத்தவரை வரத்து முந்தைய நாட்களை காட்டிலும் 5 டன்னுக்கு மேல் அதிகமாக இருந்தது. இதனால் நேற்று கிலோவிற்கு ஒரு ரூபாய் வரை குறைந்து பத்து ரூபாய்க்கு விற்றது.

**விவசாயிகள் குழு அமைப்பு**

ஈரோடு: பவானிசாகர் அருகே காராப்பட்டி பஞ்சாயத்து மாரம்பாளையம் புதூர் விவசாயிகள், தோட்டக்கலைதுறை மூலம் நலச்சங்க குழு அமைத்தனர். தோட்டக்கலை அலுவலர் சந்தியா, உதவி வேளாண் அலுவலர் அருள்ஞானமணி ஆகியோர் ஏற்பாடுகளை செய்தனர். காராப்பாடி கூட்டுறவு வங்கி இக்குழுவுக்கு கடன் வழங்க முன்வந்துள்ளது. இதன்படி, தோட்டக்கலை பயிருக்கு தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் வகையில், சொட்டுநீர் பாசனம் அமைத்து கொடுக்க ஏற்பாடு செய்துள்ளது. இத்தகவலை நலச்சங்க குழு தலைவர் தங்கராஜ் கூறினார்.

**பால் பொருட்கள் தயாரிக்க இலவச பயிற்சி**

செங்கல்பட்டு : தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல் கலைக்கழகத்தின் கீழ் மறைமலைநகர் அடுத்த காட்டுப்பாக்கம் கிராமத்தில் உள்ள வேளாண் மை அறிவியல் மையத் தில், இன்று மதிப் பூட்டப் பட்ட பால் பொருட்கள் தயாரிப்பு குறித்த இலவசப் பயிற்சி முகாம் துவங்குகிறது.இரண்டு நாட்கள் தினமும் காலை 9.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை பயிற்சி அளிக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு, பயன்பெறலாம் என காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் மையத் தலைவர் குமாரவேல் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

கொட்டாம்பட்டி: கொட்டாம்பட்டி ஊராட்சி அலுவலகத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி நடந்தது. ஆத்மா திட்டத்தின் கீழ் நடந்த பயிற்சிக்கு ஒன்றியத் தலைவர் திலகராஜ் தலைமை ஏற்க வேளாண் உதவி இயக்குநர் செல்வப்பாண்டி, தோட்டக்கலை அலுவலர் செல்வராஜ் முன்னிலை வகித்தனர். இரண்டு நாட்கள் நடந்த பயிற்சியில் கொட்டாம்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட 27 ஊராட்சிகளைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் அலுவலர் ரவி, துணை வேளாண் அலுவலர் ஆதீஸ்வரன் மற்றும் பலர் கலந்து கொண்ட பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் வெங்கடாசலபதி, ரவிச்சந்திரன், பாலதிருப்பதி, பிரபு ஆகியோர் செய்திருந்தனர்.

**கூட்டுறவுத்துறை மூலம் நெல் கொள்முதல்**

உசிலம்பட்டி : செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மணல்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில், விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் மைய துவக்க விழா நடந்தது. கூட்டுறவுத்துறை மதுரை மண்டல இணைப்பதிவாளர் குமார் தலைமை வகித்து கொள்முதலை துவக்கி வைத்தார். துணைப்பதிவாளர் கல்யாணி, மணல்பட்டி கூட்டுறவு கடன் சங்க தனி அலுவலர் கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டனர்.நெல் கொள்முதலை துவக்கிவைத்து இணைப்பதிவாளர் குமார் பேசியதாவது: கூட்டுறவுத்துறை மூலம் தற்போது நேரடி கொள்முதல் துவக்கப்பட்டுள்ளது. சன்ன ரகத்திற்கு ரூபாய் ஆயிரத்து 100 ம், மோட்டா ரகத்திற்கு ரூ.ஆயிரத்து 50ம் அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது, என்றார்.

**நெற்பயிரில் புகையான் தாக்குதல் : இழப்பீடு வழங்க கோரிக்கை**

மணமேல்குடி: மணமேல்குடி பகுதியில் நெற்பயிரில் புகையான் தாக்குதலால் அதிகமாக உள்ளது. இதை தடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விளைநிலங்களுக்கு அரசு இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்று மணமேல்குடி ஒன்றியக்குழு துணைத்தலைவர் சீனியார் அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார். அவர் அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது : மணமேல்குடி ஊராட்சி பகுதிகளில் அனைத்து பகுதிகளிலும் நெல் பயிரிடப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு பருவமழை நன்கு பெய்து ஏரி, குளம், கண்மாய்கள் நிரம்பி உள்ளது. இந்நிலையில் நெற்பயிர்கள் செழித்து வளர்ந்து கதிர்மணிகள் உருவாகும் தருணத்தில் புகையான் பூச்சி விழுந்து

பயிர்கள் கருக தொடங்கிவிட்டன. சுமார் 20 ஆயிரம் பயிர்கள் அனைத்தும் புகையான் பூச்சி தாக்கி நாசமாகி வருகிறது. எனவே வேளாண்மை துறை அலுவலர்களை ஒன்றிய பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு அனுப்பி புகையான் பூச்சியை ஒழித்து பயிர்களை காப்பாற்ற உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் புகையானால் பாதிக்கப்பட்டு நஷ்டமடைந்து வரும் விவசாயிகளுக்கு பயிர்பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலம் புகையான் பூச்சியால் ஏற்படும் நஷ்டத்தை கணக்கெடுத்து இழப்பீட்டு தொகை வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும் என்று கோரிக்கை மனுவில் மணமேல்குடி ஒன்றியக்குழு துணைத்தலைவர் சீனியார் தெரிவித்துள்ளார். இந்த மனுக்கள் கலெக்டர், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**பண்ணைத் தொழிலாளர்கள் உண்ணாவிரதம்**

புதுக்கோட்டை: புதுகையில் தமிழக அரசு பண்ணைத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டம் நடந்தது. பண்ணை தொழிலாளர்களுக்கு 5 மாதங்களாக வழங்கப்படாமல் உள்ள சம்பளத்தை உடனடியாக வழங்க வேண்டும், தமிழக அரசு அறிவித்த பொங்கல் போனஸ் ஆயிரம் ரூபாயை உடனடியாக வழங்க வேண்டும், ஆண்களுக்கு 6 மணி நேரம் மற்றும் பெண்களுக்கு 5 மணி நேர வேலையை உடனடியாக அமல் படுத்த வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி புதுகை வேளாண் இணை இயக்குனர் அலுவலகம் முன்பு நடந்த உண்ணாவிரத போராட்டத்திற்கு மாவட்ட துணைத்தலைவர் அரசப்பன் தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர் செல்வராஜ் முன்னிலை வகித்தார். மாநில நிர்வாக குழு உறுப்பினரும், ஆலங்குடி எம்எல்ஏவுமான ராஜசேகரன் தொடங்கி வைத்தார். இதில் மாநில பொதுச்செயலாளர் பாஸ்கர், இ.கம்யூ மாவட்டச்செயலாளர் முத்துக்குமரன், விவசாய தொழிலாளர் சங்க சுந்தராஜன், கட்டட தொழிலாளர் சங்க மாவட்டச்செயலாளர் தர்மராஜன், இகம்யூ நகர செயலாளர் ராமச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏஐடியுசி மாவட்ட செயலாளர் சிங்கமுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். திரளான பண்ணை தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

**உழவன் உணவகத்தில் 'ஐஸ்கிரீம்' விற்பனை**

நாமக்கல்: உழவர் சந்தை உணவகம் மக்களிடையே அதிக வரவேற்பை பெற்றுள்ள நிலையில், அதில் ஐஸ்கிரீம் விற்பனையும் துவங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் முதல் முதலாக கடந்த ஆண்டு செப்டம்பர் 14ம் தேதி உழவர்களின் உணவகம் திறக்கப்பட்டது. உழவர் வருமானத்தை பெருக்க ஏதாவது செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்ய திட்டம் வகுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது. பால், தயிர், மோர், நெய் மற்றும் பால்கோவா பொருள் தயாரித்து விற்பனை துவங்கப்பட்டது. துவங்கப்பட்ட 15 நிமிடங்களில் அனைத்தும் விற்பனையானது என்பது குறிப்பிடத்தக்கது.

நகர்ப்புறத்தில் வாழும் மக்கள் மற்றும் நுகர்வோர் கிராமப்புறத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமானதாகவும், கலப்படம் இல்லாமலும் இருக்கும் என்பதால், அவற்றுக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது. அத்தகைய விவசாயிகளின் வாழ்க்கை மேம்படுத்தும் வகையில், மாலை நேரத்தில் உழவர் சந்தையில், உழவர்களின் உணவகம் திறக்கப்பட்டது. கலெக்டர் தலைமையில் நடந்த திறப்பு விழாவில், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் காந்திச்செல்வன் உணவகத்தை திறந்து வைத்தார்.

துவங்கப்பட்ட நாளில் மட்டும் 20 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக விற்பனையானது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு இட்லி, தோசை, சோளசாதம், சாமை சாதம், தினை சாதம், கம்மங்கூழ், கேழ்வரகு கழி, பக்கோடா, பாசிபயிறு உருண்டை, சுண்டல், வடை, ஆட்டுக்கால் கிழங்கு மூலிகை சூப், காய்கறி சூப், உளுந்தங்கஞ்சி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தயார் செய்து விற்பனை செய்யப்படுகிறது. மாலை வேளையில் உணவகம் திறக்கப்படுவதால், நாள்தோறும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பெற்றோர் தங்கள்

குழந்தைகளுடன் வந்து, இட்லி, பனையாரம், உளுந்தங்கஞ்சி, கழி, சோளப்பனையாரம் போன்ற உணவு வகைகளை வாங்கி உண்ணுகின்றனர்.

அதனால், நாளுக்கு நாள் உணவு பொருட்களின் விற்பனை அதிகரித்து வருகிறது. இதுவரை 35 லட்சம் ரூபாய்க்கும் மேல் விற்பனையாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு விற்பனை செய்யப்படும் உணவு வகைகள் அனைத்தும் சுவையாகவும், தரமானதாகவும், சுத்தமாகவும் விற்பனை செய்வதால், பெருமளவில் வந்து ருசிபார்க்கின்றனர். இந்த உழவன் உணவகம் மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றள்ளது. இந்நிலையில் உழவன் உணவகத்தில் முன்னோடி வங்கியான இந்தியன் வங்கியின் மூலம் பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 1.38 லட்சம் ரூபாய் மதிப்பில் இயற்கை முறையில் ஐஸ்கிரீம் தயாரிக்கும் இயந்திரம் அமைக்கப்பட்டது.

அதன் துவக்க விழாவில், கலெக்டர் சகாயம் தலைமை வகித்து விற்பனையை துவக்கி வைத்தார். இந்தியன் வங்கி ஏ.ஜி.எம்., மகாதேவன், முதன்மை மேலாளர் ராமசாமி, முன்னோடி வங்கி மேலாளர் சுரேஷ், கால்நடை மருத்துவ கல்லூரி முதல்வர் சந்திரஹாசன், கே.வி.கே., ஒருங்கிணைப்பாளர் மோகன், எம்.எல்.ஏ., ராஜேந்திரன், ஆத்ம திட்ட துணைத்தலைவர் கணேசன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**பொம்மைக்கு மக்களிடம்... வரவேற்பு! மகளிர் சுயஉதவிக்குழு தயாரிப்பு**

நாமக்கல்: மகளிர் சுயஉதவிக்குழுவினர் தயாரித்து விற்பனை செய்யும் பொம்மை மற்றும் ரெக்ஸின் பேக் ஆகியவை மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. அதன் மூலம் கணிசமான வருவாய் ஈட்டி வருகின்றனர்.

நாமக்கல்லில் உதயம் மகளிர் சுயஉதவிக்குழு செயல்பட்டு வருகிறது. அதில் 16 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அதன் ஊக்குனராக காமாட்சி என்பவர் குழுவை வழிநடத்தி வருகிறார். நாட்டில் மகளிர் குழுக்கள் துவங்கப்பட்டதே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தவும், வருமானத்தை பெருக்கி அதன் மூலம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் துவங்கப்பட்டது. அதை நிறைவேற்றும் வகையில், இக்குழுவினர் சுயதொழில் மூலம் தற்போது கணிசமான அளவுக்கு வருவாயை ஈட்டி வருகின்றனர். இக்குழுவினர் இரண்டு மாதகால பயிற்சியாக நபார்டு வங்கி மூலம் ரெக்ஸின் பேக், பொம்மை தயாரித்தல் பயிற்சி பெற்றனர். பயிற்சி முடிவில் வங்கி உதவியுடன் 2.50 லட்சம் ரூபாய் மானியக்கடன் பெற்று பேக் மற்றும் பொம்மை தயாரிக்கும் பணியில் ஈடுபடத்துவங்கினர்.

கடந்த 2007ம் ஆண்டு துவங்கப்பட்டு பல்வேறு டிசைன்களில் பொம்மைகள் தயாரித்து விற்பனை செய்த வகையில் கிடைத்த வருவாயை கொண்டு, செலவு போக, வங்கி கடனையும் பெருமளவில் திருப்பி செலுத்தி இன்று மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்குகின்றனர். இது குறித்து சங்கத்தின் ஊக்குனர் காமாட்சி கூறியதாவது: மகளிர் சுயஉதவிக்குழு துவங்கப்பட்டதால் சேமிப்பு பழக்கம் ஏற்பட்டது. அதை தொடர்ந்து ஏதாவது தொழில் செய்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக திகழவேண்டும் என்ற நோக்கில் ரெக்ஸின் பேக், பொம்மை தயாரித்தல் பயிற்சி மேற்கொண்டோம்.

இரண்டு மாத கால பயிற்சியில் தயார் செய்யப்பட்ட பொம்மைகள் 17 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. அதை தொடர்ந்து நபார்டு வங்கி உதவியுடன் வங்கியில் 2.50 லட்சம் ரூபாய் கடன் பெற்று பொம்மைகள், ரெக்ஸின் பேக் உற்பத்தி செய்ய துவங்கினோம்.இங்கு கரடி, நாய், அணில், மிக்கி மவுஸ், மங்கி, கார்ட்டூன் உள்ளிட்ட 50 வகையான பொம்மை தயார் செய்கிறோம். அதற்கான பொருட்களை பெங்களூருவில் வாங்கி வருகிறோம். இங்கு ஒரு மீட்டர் 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால், பெங்களூருவில் ஒரு மீட்டர் 300 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். அதேபோல், பஞ்சு அங்கேயே கொள்முதல் செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் பொம்மைகள், கரூர் மாவட்டத்தில் உள்ள ஒரு ஃபேன்சி ஸ்டோருக்கு ரெகுலராக விற்பனை செய்யப்படுகிறது. பெரிய சைஸ் பொம்மைகள் ஆர்டரின் பேரில் தயார்

செய்துதரப்படுகிறது. ஒரு பொம்மை 50 ரூபாயில் இருந்து அதிக பட்சமாக 1,300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. மேலும், அரசு சார்பில் நடக்கும் கண்காட்சியிலும் பங்கேற்று விற்பனை செய்து வருகிறோம்.

டில்லியில் பிரகதி மைதானத்தில் 15 நாட்கள் நடந்த கண்காட்சியில் 50 ஆயிரம் ரூபாய் அளவுக்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது. அதேபோல் நவராத்திரியை முன்னிட்டு நடந்த கண்காட்சியில் 10 நாட்களில் 25 ஆயிரம் ரூபாய் அளவுக்கு விற்பனையானது. இத்தகைய பொம்மைக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளதால், அதிக அளவில் தயார் செய்து பல்வேறு பகுதியில் நடக்கும் கண்காட்சியில் இடம் பெற்று விற்பனை செய்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**காய்கறி விலை குறைவு பயறு, பருப்பு விலை உயர்வு**

சிவகங்கை: வாரச்சந்தைக்கு காய்கறிகள் வரத்து அதிகரித்ததால் ,காய்கறி விலை குறைந்துள்ளது. அதேநேரம் பயறு, பருப்புகளின் விலை உயர்ந்துஉள்ளது.சிவகங்கை வாரச்சந்தையில் நேற்றைய விலை:காய்கறி விலை (கிலோ) நிலவரம்:கடந்த சில வாரங்களுக்கு முன் 25 ரூபாய்க்கு விற்ற கத்தரி-10 ரூபாய், 20 க்கு விற்ற வெண்டை-16, 20 க்கு விற்ற பாகற்காய்-16, 24 க்கு விற்ற முருங்கைபீன்ஸ்- 40, 20 க்கு விற்ற கேரட்-10, 16 க்கு விற்ற முள்ளங்கி-5,20 க்கு விற்ற உருளை-18, 12 க்குவிற்ற கோஸ்-10, 15 க்கு விற்ற தக்காளி-10, கருணை-24, 60 க்கு விற்ற இஞ்சி-40, 35 க்கு விற்ற அவரை-20, பட்டர் பீன்ஸ்-70, சின்ன வெங்காயம்-16, பெல்லாரி-12, காலி பிளவர்-15, 20 க்கு விற்ற சேனை-30, 32 க்கு விற்ற சேம்பு-30, பச்சை மிளகாய்-20, 16 க்கு விற்றபீட்ரூட் -10, சவ்சவ்-10, சோயா பீன்ஸ்-40, எலுமிச்சை-35, பீர்க்கை-20, பூசணி-8, மொச்சை-40 ரூபாய்க்கும் விற்றது.பழங்கள் (கிலோ): 100 க்கு விற்ற ஆப்பிள்-80, மாதுளை-60, இரண்டாவது ரகம்-40, சாத்துக்குடி-40, சப்போட்டா-10, கொய்யா -30, அன்னாசி-25 ரூபாய்க்கும் விற்றது.

பயறு, பருப்பு விலை உயர்வு: வெளி மார்க்கெட்டில் மொத்த விலையில் மாற்றம் ஏற்பட்டாலும் பொதுமக்கள் வாங்கும், சில்லரை விலைகளில் மாற்றம் ஏற்படவில்லை. மாறாக பருப்பு விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கடந்த வாரம், 78 ரூபாய்க்கு விற்ற துவரம் பருப்பு 76க்கு விற்கப்பட்டது. 55 க்கு விற்ற தட்டப்பயறு - 58, கடலை பருப்பு-56, 85 க்கு விற்ற உளுந்தம் பருப்பு- 88, 36 க்கு விற்ற கொண்டக்கடலை-38, 30 க்கு விற்ற பச்சை பட்டாணி-32, வெள்ளை-30, 54 க்கு விற்ற மொச்சை- 58 விற்கப்பட்டது.42க்கு விற்ற கொண்டக்கடலை 40, 75 க்கு விற்ற பாசிப்பருப்பு 80, மொச்சை 40, 60 க்கு விற்ற மல்லி 65, மஞ்சள் 95 க்கு விற்றது.30க்கு விற்ற புளி 35, வத்தல் 65 க்கும், 120 க்கு விற்ற மலைப்பூண்டு 100, சாதா பூண்டு-80, சோம்பு-120, 160 க்கு விற்ற சீரகம்-170, கடுகு-180 என விற்பனை செய்யப்பட்டது.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

சிவகங்கை: சிவகங்கை உழவர் பயிற்சி மையத்தில், உழவர் விவாத குழு அமைப் பாளர்களுக்கான பயிற்சி நடந்தது.பயறு சாகுபடி தொழில்நுட்பம், பூச்சி நோய் நிர்வாகம், செம்மை நெல் சாகுபடி, மண்புழு உரம் தயாரித்தல் குறித்து விவசாய அலுவலர் லயோலா அன்புக்கரசி பேசினார். திருப்புவனம் வட்டார விவசாய அலுவலர் ஜெயந்தி, தோட்டக் கலை உதவி இயக்குனர் கல்யாணசுந்தரம், கால்நடை டாக்டர் ராமலட்சுமி பேசினர்.

**300 மூடை நெல் இருந்தால் களத்தில் கொள்முதல் : நுகர்பொருள் வாணிப கழக மேலாண் இயக்குனர் தகவல்**

தஞ்சாவூர்: டெல்டா மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை நுகர்பொருள் வாணிபக்கழக மேலாண் இயக்குனர் வீரசண்முகமணி நேற்று நேரில் ஆய்வு செய்தார். தஞ்சையில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது: டெல்டா மாவட்டத்தில் சம்பா அறுவடைப்பணி முழு வீச்சில் நடக்கிறது. கொள்முதல் நிலையங்களில் அதிக அளவு நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. டெல்டாவில் ஆயிரத்து 123 நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் இதுவரை மூன்று லட்சத்து 87 ஆயிரத்து 977 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தினமும்

சராசரியாக திருவாரூரில் 11 ஆயிரம் டன், தஞ்சையில் எட்டாயிரம் டன், நாகையில் ஏழாயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. கொள்முதல் பணியை ஆய்வு செய்ய 159 கொள்முதல் அலுவலர்கள், 17 உதவி மேலாளர்கள் செயல்படுகின்றனர்.

டெல்டா மாவட்டத்தில் இருந்து இதுவரை லாரி மற்றும் ரயில்கள் மூலம் 84 ஆயிரத்து 589 டன் நெல் வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வரத்து அதிகமாகி உள்ளதால், கொள்முதல் நிலையங்கள் கூடுதல் நேரம் செயல்பட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தினமும் மூன்று லட்சம் ரூபாய் வழங்கப்பட்டதை ஐந்து லட்சமாக உயர்த்தி வழங்குகிறோம். குறிப்பிட்ட விவசாயியிடம் 300 மூடை நெல் இருந்தால், அவரது களம், இருப்பிடத்துக்கு லாரி, தராசுகளுடன் சென்று கொள்முதல் செய்யப்பட்டு, அங்கேயே பணம் பட்டுவாடா செய்யப்படும். திடீர் ஆய்வுகள் மூலம் தஞ்சை மாவட்டம் திருக்கருக்காவூர், தெக்கூர், களிமேடு, பூதலூர் ஆகிய கொள்முதல் நிலையங்களில் மூன்று பட்டியல் எழுத்தர், இரண்டு உதவியாளர்கள் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டு மாற்றம் செய்யப்பட்டனர்.

திருவாரூர் மாவட்டத்தில் காளாஞ்சேரி, இளையூர், ஒளிமதி ஆகிய கொள்முதல் நிலையங்களில் பட்டியல் எழுத்தர்கள் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டனர். நாகை மாவட்டத்தில் கடலங்குடி கொள்முதல் நிலைய பட்டியல் எழுத்தர் விடுவிக்கப்பட்டுள்ளார். திடீர் ஆய்வின்போது தவறு செய்யும் பணியாளர்கள் மீது விசாரணைக்குப்பின் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கொள்முதல் பணியைத் தொடர்ந்து கண்காணிக்க பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.
கொள்முதல் தொடர்பாக புகார்களை தஞ்சை மாவட்ட விவசாயிகள் 9445190660, திருவாரூர் மாவட்டத்துக்கு 9445190661, நாகை மாவட்ட விவசாயிகள் 9445190662 என்ற எண்களில் புகார் செய்யலாம். தற்போதுதான், அதிகமாக கொள்முதல் துவங்கியதால் இனி கொள்முதல் அதிகப்படுவதுடன், புகார்களும், நடவடிக்கைகளும் அதிகமாகும். கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளை தவிர்த்து, வியாபாரிகளிடம் முன்னுரிமை கொடுத்து கொள்முதல் செய்யப்படுவதாக புகார்கள் வந்தது. அவ்வாறு செய்யவில்லை. நெல் கொள்முதல், லாரிகளை நகர்வு செய்தல் போன்றவைகளுக்கு பணம் கொடுத்தால்தான் செயல் நடக்கும் என்ற புகார் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது, தஞ்சை மாவட்ட கலெக்டர் சண்முகம் உடனிருந்தார்.

**விவசாயக் கூட்டு பொறுப்புக்குழு கூட்டம்**

தஞ்சாவூர்: ஒரத்தநாடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில் விவசாயக் கூட்டு பொறுப்புக்குழு கூட்டம் சங்க கட்டிடத்தில் நடந்தது.
தனி அலுவலர் தீட்சண்யா தலைமை வகித்தார். கூட்டுறவு சார்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) ஸ்ரீதர், கூட்டுறவு சங்க செயலாளர் தாமரைச் செல்வன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கூட்டுறவு வங்கியில் உறுப்பினர் ஆவதற்கான வழிமுறைகள், விவசாய பணிகளுக்கு கடன்பெறுவது எப்படி, வங்கியில் கணக்கு தொடங்கி எத்தனை மாதங்கள் கழித்து கடன் பெறுவது என்பது பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

**ஏலத்தோட்ட தொழிலாளர்களுக்கு போனஸ்பேச்சுவார்த்தை தோல்வி**

கம்பம் : ஏலத் தோட்ட தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குவது தொடர்பாக, தொழிலாளர் சங்கத்தினருக்கும், ஏல விவசாய சங்க பிரதிநிதிகளுக்கும் இடை யே கம்பத்தில் நடந்த முதல் கட்ட பேச்சுவார்த் தை தோல்வியில் முடிந் தது.கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. பெரும் பாலான ஏலத் தோட் டங்கள் தமிழகத்தை சேர்ந்தவர்களிடம் உள்ளது. தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சம்பளம், பஞ்சப்படி, போனஸ் போன்றவைகள், தொழிலாளர் நலச்சட்டப் படி வழங்கப்படுகிறது. போனஸ் ஆண்டுதோறும் மார்ச் மாதம் வழங்கப்படும். அதற்கு முன்னதாக பிப்.,ல்

இருதரப்பினரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, முடிவு செய்யப்படும்.கடந்த ஆண்டு ஏலத் தோட்ட தொழிலாளர்களுக்கு 12.5 சதவீதம் போனஸ் வழங்கப்பட் டது.

இந்த ஆண்டு ஏலக்காய் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது. எனவே தொழிலாளர்கள் தரப்பில் போனஸ் தொகை யை அதிகமாக எதிர்பார்க் கின்றனர். விவசாயிகள் தரப் பிலோ "இந்த விலை உயர்வு நிரந்தரமல்ல' என்றும், போதிய அளவு விளைச் சல் இல்லை என்றும், விலை சரிவதற்கான வாய்ப்புகள் உள்ளதென்றும் கூறுகின்றனர்.இந்நிலையில், நேற்று முன்தினம் போனஸ் தொடர்பாக கம்பத்தில் உள்ள கேரள கார்டமம் குரோயர்ஸ் ஒன்றிய அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடந்தது. கேரள கார்டமம் குரோயர்ஸ் யூனியன், வண்டன்மேட்டில் உள்ள கார்டமம் குரோயர்ஸ் அசோசியேசன், போடியில் உள்ள கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் ஆகிய மூன்று ஏலவிவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், சி.ஐ.டி.யூ., ஐ.என். டி.யூ.சி., பி.எம்.எஸ்., ஏ.ஐ.டி.யூ.சி. உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.தொழிற்சங்கத்தினர் தரப்பில் 20 சதவீதம் வரை போனஸ் எதிர்பார்ப்பதாக கூறப்பட்டது. விவசாயிகள் தரப்பில் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட 12.5 சதவீதத்தை உயர்த்தி, இந்த ஆண்டு 14 சதவீதம் வரை தருவதாகவும் கூறப் பட்டது. இதை தொழிற்சங்கத்தினர் ஏற்க மறுத்ததால், பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில் லை. அடுத்தகட்ட பேச்சுவார்த்தை வரும் பிப்.,20ம் தேதி நடைபெற உள்ளது.

**இயற்கை உரம் விநியோகம் செய்பவர்கள் : அதிகாரி வேண்டுகோள்**

தூத்துக்குடி: இயற்கை உரம் உற்பத்தி செய்பவர்கள், விநியோகம் செய்பவர்கள் கட்டாயம் வேளாண்மைத்துறையில் லைசென்ஸ் பெற வேண்டும் என்று தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் லூயிஸ் ராஜரத்தினம் தெரிவித்தார்.தமிழகத்தில் தற்போது இயற்கை விவசாயம் பிரபலமாகி வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்திலும் இந்த விவசாயத்திற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. இயற்கை உரங்கள் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைப்பதுடன் மகசூலும் அதிகமாக இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் இயற்கை உரங்கள் மீதுள்ள ஆர்வம் கூடுதலாகி உள்ளது.

பொதுவாக இதுபோன்ற ஆர்வத்தை பயன்படுத்தி இயற்கை உரங்களில் போலியான உரங்கள் ஊடுறுவ வாய்ப்பு உருவாகிவிடும் என்கிற தகவல் அரசுக்கு சென்றது. இதனால் இதனை உரக்கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இதனால் இயற்கை உரம் உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள் வேளாண்மைத்துறையில் லைசென்ஸ் பெற வேண்டும் என்று தற்போது அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் லூயிஸ் ராஜரத்தினம் கூறியதாவது;இயற்கை விவசாயம் தற்போது பிரபலமாகி வருகிறது. இயற்கை விவசாயத்திற்கு மண்புழுஉரம் மற்றும் உயிர் உரங்கள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகிறது. இதுபோன்று இயற்கை உரம் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்ய 1985ம் ஆண்டு உரக்கட்டுப்பாடு சட்டத்தின் படி லைசென்ஸ் பெற்று தான் இதனை விற்பனை செய்ய வேண்டும். இதனால் தூத்துக்குடி மாவட்டத்தில் உரம் உற்பத்தி மற்றும் விற்பனை செய்பவர்கள் உடனடியாக தூத்துக்குடி கலெக்டர் ஆபிஸ் வளாகத்தில் உள்ள வேளாண்மைத்துறை அலுவலகத்தை அணுகி இதற்கான உரிமம் பெறுவதற்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.உரிமம் பெறாமல் விற்பனை செய்தால் சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு அவர் தெரிவித்தார். ஆத்மா திட்ட நோடல் அதிகாரி ஜோசப்நஸ்ரேன் பிரேம், தரக்கட்டுப்பாடு உதவி இயக்குநர் குணபாலன் ஆகியோர் உடனிருந்தனர்.

**பூமியின் வெப்பம் உயர்ந்து கொண்டே போகிறது : பாரதிதாசன் பல்கலை துணைவேந்தர் வருத்தம்**

திருச்சி: ""பூமியின் வெப்ப அளவு ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே போகிறது,'' என்று திருச்சியில் துவங்கிய சர்வதேச பருவநிலை மாற்றம் பற்றிய கருத்தரங்கில் பாரதிதாசன் பல்கலை துணைவேந்தர் பொன்னவைக்கோ பேசினார். திருச்சி பாரதிதாசன் பல்கலையின் பயோ டெக்னாலஜி துறை சார்பில் பருவநிலை மாற்றும் உயிர் வளங்களின் பாதுகாப்பும், மேம்பாடும் என்ற தலைப்பிலான நான்கு நாள் சர்வதேச கருத்தரங்கம் நேற்றுமுன்தினம்

பல்கலை வளாகத்தில் துவங்கியது. கருத்தரங்கின் துவக்கவிழாவில் பாரதிதாசன் பல்கலை துணைவேந்தர் பொன்னவைக்கோ, டில்லி நீம் அமைப்பின் தலைவர் ரமேஷ் சக்சேனா, மத்திய மருத்துவ மற்றும் நறுமண தாவரங்கள் ஆய்வுமைய இயக்குனர் ராஜசேகர், பாரதிதாசன் பல்கலை பயோ டெக்னாலஜி துறைத்தலைவர் கணபதி, பேராசிரியர் ராவ், ஒருங்கிணைப்பார் சிவராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

சர்வதேச கருத்தரங்கை துணைவேந்தர் பொன்னவைக்கோ துவக்கிவைத்தார். இதில் சிங்கப்பூர், கொரியா, சீனா, ஈரான் உள்ளிட்ட பல நாடுகளின் மாணவ, மாணவிகளும், பேராசிரியர்களும் கலந்து கொண்டுள்ளனர். பருவநிலை மாற்றம் பற்றிய 200க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றம் பற்றி சர்வதேச கருத்தரங்கை துவக்கிவைத்து பாரதிதாசன் பல்கலை துணைவேந்தர் பொன்னவைக்கோ பேசியதாவது:
பருவநிலை மாற்றம் ஏற்பட இயற்கையால் ஏற்படும் காரணங்களை கட்டுப்படுத்த முடியாது. ஒருபுறம் நாட்டில் மக்கள் தொகை அதிகரிக்க, அதிகரிக்க மரங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. தற்போது கார்பன்டை ஆக்சைடை உறிஞ்சிக் கொள்ள போதுமான மரங்கள் இல்லை. தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகை, வாகனங்களின் புகை போன்றவற்றால் பூமியின் வெப்ப அளவு ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே போகிறது. நாட்டில் எவ்வளவு மரங்கள் அழிக்கப்படுகிறதோ, அந்தளவுக்கு மரங்களை பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.
கடந்த 2005ம் ஆண்டு வரை 100 ஆண்டுகளில் நாட்டில் வெப்பத்தின் சராசரி அளவு 0.8 சென்டிகிரேடாக இருந்தது. தற்போது இது ஒவ்வொரு ஆண்டும் 0.13 சென்டிகிரேடு அதிகரித்து வருகிறது. ஆகையால், பருவநிலை மாற்றத்தை சமாளிக்க மரங்களை பாதுகாப்பது அவசியம். இவ்வாறு அவர் பேசினார்.

**மணிலா பயிரை காப்பாற்ற வேளாண் துறை யோசனை**

செய்யாறு: மணிலா பயிரை இளம் புழுக்கள் சுரண்டி தின்றுவிடும். இதனால் மகசூல் குறைய வாய்ப்புள்ளது. இதை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வேளாண்துறை உதவி இயக்குனர் சாந்தி கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது: இளம் புழுக்கள் தளிர் இலைகளில் மேல்பாகத்தை சுரண்டி தின்னும். வளர்ந்த புழுக்கள், இலைகளின் நடு நரம்புகளை தவிர மற்ற பாகங்களை தின்றுவிடும். இந்த புழுக்கள் பகல் நேரங்களில் மண்ணில் பதுங்கி இருந்து இரவில் இலைகளை தின்னும். இதனால் மணிலா பயிரில் காய் பிடிப்பு குறைந்து மகசூல் குறைய வாய்ப்புள்ளது. அதனால் இந்த புழுக்களை கட்டுப்படுத்த நச்சு உணவு தயார் செய்து மாலை நேரங்களில் வயலில் வைக்க வேண்டும்.ஒரு ஏக்கருக்கு பச்சரிசி தவிடு 5 கிலோ, வெல்லம் ஒரு கிலோ, கார்பரைல் (செவின் 50% தூள்) அரை கிலோ, இவற்றுடன் தேவையான அளவு நீர் சேர்த்து சிறு உருண்டைகளாக உருட்டி, வயலில் பல இடங்களில் மாலை நேரத்தில் வைக்கலாம். இதனால் வளர்ந்த புழுக்கள் கவரப்பட்டு, விஷ உணவை உண்டு இறந்து போகும். இதனால் மணிலா பயிர்கள் செழித்து வளர்ந்து, மகசூல் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**விதை நெல் உற்பத்தி பயிற்சி முகாம்**

வாலாஜாப்பேட்டை,: காவேரிப்பாக்கம் ஒன்றியம், துரைபெரும்பாக்கத்தில் விவசாயிகளுக்கான விதை நெல் உற்பத்தி பயிற்சி வேளாண்மை அலுவலர் பாபு தலைமையில் நடந்தது.உதவி வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன் வரவேற்றார். நிகழ்ச்சியில், விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள், விதை நேர்த்தி செய்தல், உர நிர்வாகம், நடவு முறை, களைகளை அகற்றுதல், அறுவடைக்கு முன், பின் நேர்த்திகள் குறித்து விளக்கப்பட்டது.காவேரிப்பாக்கம் வேளாண்மை இணை இயக்குனர் ஜெயச்சந்திரன் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், விதை கிராம திட்டத்தின் நோக்கங்கள் குறித்தும், இடுபொருட்கள், மானியம் குறித்தும் பேசினார். இதில் விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர்.வேளாண்மை உதவி அலுவலர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

**கால்நடை சிகிச்சை முகாம்**

விழுப்புரம் : மணலூர்பேட்டை அடுத்த பிள்ளையார் பேட்டையில் கால்நடை சிறப்பு முகாம் நடந்தது.
மாவட்ட கூட்டுறவுத் துறை, இந்திய உர உழவர் கூட்டுறவு சங்கம் சார்பில் நடந்த முகாமை கூட்டுறவு இணைபதிவாளர் (பொறுப்பு) ரேணுகாம்பாள் துவக்கி வைத்தார். இப்கோ முதுநிலை மேலாளர் வரேஸ், இப்கோ கள அலுவலர் சந்துரு, சங்க தனி அலுவலர் மோகன், ஊராட்சி தலைவர் பாண்டியன், சங்க செயலாளர் முனியன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முகாமில் 765 கால்நடைகளுக்கு உரிய ஆலோசனைகள் மற்றும் மருந்துகள் வழங்கி கோமாரி நோய் தடுப்பூசி, குடற் புழு நீக்கம் போன்ற சிகிச்சையளிக்கப்பட்டன.

**உளுந்து விலை குறைவாக நிர்ணயித்ததால் கள்ளக்குறிச்சியில் விவசாயிகள் மறியல்**

கள்ளக்குறிச்சி : உளுந்து விலையை குறைவாக நிர்ணயித்ததால் கள்ளக்குறிச்சியில் விவசாயிகள் திடீர் சாலை மறியல் செய்தனர்.
கள்ளக்குறிச்சி மார்க் கெட் கமிட்டிக்கு நேற்று 1,200 மூட்டை உளுந்து விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. ஒரு மூட்டை உளுந்து அதிகபட்சம் 4,600 ரூபாய், குறைந்தபட்சம் 4,200 ரூபாய் என வியாபாரிகள் விலை நிர்ணயம் செய் தனர். கடந்த இரு நாட்க ளாக நிர்ணயித்ததைவிட நேற்று திடீரென விலை குறைப்பு செய்ததாக விவசாயிகள் தரப்பில் வியாபாரிகளுடன் வாக்குவாதம் செய்தனர்.
வியாபாரிகள் விலையை உயர்த்த முன் வராததால் அதிருப்தியடைந்த விவசாயிகள் காலை 11.30 மணிக்கு திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். கள் ளக்குறிச்சி-கச்சிராயபாளையம் நெடுஞ்சாலையில் போக் குவரத்து பாதித்ததால் சப் இன்ஸ்பெக் டர்கள் விஜி, பாஸ்கர், ராஜேந்திரன் மற் றும் போலீசார் விரைந்து வந்து விவசாயிகளை சமாதானப்படுத்தினர்.
பின்னர் மேலாளர் இளங்கோ முன்னிலையில் நடந்த பேச்சு வார்த் தையில் விழுப்புரம் கமிட் டியில் நிர்ணயித்த விலையை வழங்கும்படி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். நிர்ணயித் ததை விட அதிக விலை எதிர் பார்க்கும் விவசாயிகள் குடோனில் இருப்பு வைத்து, விலை ஏறும் போது விற்றுக்கொள்ளலாம் என மேலாளர் தெரிவித்தார்.

**விளைபொருளை இருப்பு வைக்க வசதியில்லை: விவசாயிகள் கவலை**

உடுமலை: விளைபொருளை இருப்பு வைக்க போதிய வசதி இல்லாமல், குடிமங் கலம் பகுதி விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.குடிமங்கலம் பகுதி விவசாயிகள் தங்களது விளைபொருளை இருப்பு வைத்து விற்க, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் பெதப்பம்பட்டியில் செயல்படுகிறது. பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு பல ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட மக்காச்சோள அறுவடை துவங்கியதும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு வரத்து அதிகரித்தது. இரண்டு கிடங்குகளிலும் 7,500 மூட்டை மக்காச்சோளம் மற்றும் 740 மூட்டை கொத்தமல்லி இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கிடங்கின் மொத்த கொள்ளளவும் நிரம்பியுள்ளது.குடிமங்கலம் பகுதியில் கொண்டைக்கடலை மற்றும் இதர தானிய பயிர்கள் சாகுபடி அதிகளவு மேற்கொள்ளப்படுகிறது. அறுவடை சீசனில் விலை வீழ்ச்சி ஏற்படுவதால், அதிகளவு விவசாயிகள் விளைபொருட்களை இருப்பு வைத்து விற்பனை செய்ய ஆர்வம் காட்டுகின்றனர்.தேவையான கிடங்கு மற்றும் கள வசதி இல்லாததால், விவசாயிகள் ஆண்டுதோறும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். பெரும்பாலான விவசாயிகள், தானியப்பயிர்களை காய வைக்க ரோடுகளை பயன்படுத்தி வருகின்றனர். தனியார் குடோன்களையும், விளைநிலங்களில் போதிய பாதுகாப்பு இல்லாமலும் இருப்பு வைக்க வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர்.இந்நிலையில், வேளாண் துறை அமைச்சருக்கு விவசாயிகள் அனுப்பியுள்ள மனு:குடிமங்கலம் பகுதியில் மக்காச்சோளம், கொத்தமல்லி, கொண்டைக்கடலை மற்றும் இதர தானியப்பயிர்கள் பல ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆனால், போதிய கள மற்றும் கிடங்கு வசதியில்லை. பெதப்பம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத் தில் வசதிகள் மேம்படுத்த வேண்டும்.வளாகத்தில் கூடுதல் கிடங்குகள் கட்ட தேவையான இட வசதி உள்ளது. கிராமங்களில் சாகுபடி பரப்பை கணக்கிட்டு, தேவையான களங்கள் கட்ட வேண்டும். ஐந்து கிராமங்களுக்கு ஒரு கிடங்கு கட்டி,

விளைபொருட்களை இருப்பு வைத்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

**நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில்**
**வெங்காயம் ஏற்றுமதி 49% சரிவு**

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*

*நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி 49 சதவீதம் சரிவடைந்து 58,360 டன்னாக குறைந்துள்ளது. இது சென்ற ஆண்டு ஜனவரி மாதத்தில் 1,14,431 டன்னாக இருந்தது. கடந்த 1998–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நம் நாட்டிலிருந்து 537 டன் அளவிற்கே வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதனுடன் ஒப்பிடும்போது, சென்ற ஜனவரி மாதத்தில் ஏற்றுமதி 108 மடங்கு வளர்ச்சி கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*விலை*

*1998–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.22 என்ற விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டது. அப்போது உள்நாட்டில் விலை இதை விட மிகவும் அதிகரித்து இருந்ததால், மத்திய அரசு வெங்காயம் ஏற்றுமதிக்கு அம்மாதத்தின் இடைப்பகுதியில் தடை விதித்தது. இத்தடை 1999–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை இருந்தது.*

*நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.23 என்ற விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டிலும் இதன் விலை ஏறக்குறைய இதே அளவில்தான் உள்ளது. 12 ஆண்டுகளுக்கு முந்தைய நிலவரத்துடன் ஒப்பிடும்போது அளவின் அடிப்படையில்தான் வெங்காயம் ஏற்றுமதி பன்மடங்கு அதிகரித்துள்ளது. அதே சமயம் ஏற்றுமதி வருவாய் டன்னுக்கு சுமார் ரூ.1,500–தான் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*நடப்பு நிதியாண்டில்...*

*ஏற்றுமதியைக் காட்டிலும் உள்நாட்டு விற்பனையில் அதிக ஆதாயம் கிடைக்கும் போதும், உள்நாட்டில் கிடைக்கும் விலை, ஏற்றுமதி விலைக்கு நிகராக இருக்கும்போதும் ஏற்றுமதி குறைவது இயற்கையானது. சென்ற 2008–09 முழு நிதி ஆண்டில் 17.83 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி ஆகியுள்ளது. இது, நடப்பு நிதி ஆண்டில் ஜனவரி மாதம் வரையிலான 10 மாத காலத்தில் 14.88 லட்சம் டன்னாக உள்ளது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது, நடப்பு நிதி ஆண்டில், வெங்காயம் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அளவைப் போன்று இருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

**வரும் 2012–ஆம் ஆண்டிற்குள்**
**இந்தியா, உருக்கு உற்பத்தியில் இரண்டாவது இடம் பிடிக்கும்**

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*

*அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. இதனையடுத்து, வரும் 2012–ஆம் ஆண்டிற்குள், உருக்கு பொருள்கள் உற்பத்தியில், உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்தை பிடிக்கும் என்று மத்திய உருக்குத் துறை அமைச்சர் வீரபத்ரசிங் தெரிவித்தார்.*

*5.70 கோடி டன்*

*இந்தியாவில், தற்போது ஆண்டுக்கு 5.70 கோடி டன் உருக்கு பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த வகையில், உலக அளவில் தற்போது இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. சீனா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் முறையே முதல், இரண்டாவது, மூன்றாவது இடங்களில் உள்ளன. இந்நிலையில், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் நம் நாட்டில் உருக்கு உற்பத்தி இரண்டு மடங்கு அதிகரிக்க உள்ளது.*

*இது குறித்து வீரபத்ரசிங் கூறும்போது, "வரும் 2012–ஆம் ஆண்டிற்குள் நாட்டின் உருக்கு உற்பத்தியை 12.40 கோடி டன்னாக உயர்த்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, இந்தியா உருக்கு உற்பத்தியில் தலைசிறந்து விளங்குவதுடன், சர்வதேச அளவில் ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளையும் விஞ்சி இரண்டாவது இடத்தை பிடிக்கும். இந்தியாவில் உருக்கு பயன்பாடும் வியக்கத்தக்க வகையில் அதிகரித்து வருகிறது" என்று தெரிவித்தார்.*

*இந்நிலையில், இந்தியாவில் புதிதாக உருக்குத் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்காக, நிறுவனங்கள் 8,000 கோடி டாலர் (ரூ.3,68,000 கோடி) மதிப்பிற்கு முதலீடுகளை மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்து வருகின்றன. இவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், உருக்கு உற்பத்தியில் பெரும் எழுச்சி ஏற்படும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

*'செயில்' நிறுவனம்*

*இந்தியாவில் உருக்கு உற்பத்தியில் பொதுத் துறையைச் சேர்ந்த 'செயில்' நிறுவனம் முதலிடத்தில் உள்ளது. இந்நிறுவனம், அதன் உருக்கு பொருள்கள் உற்பத்தியை 100 சதவீதம் அதிகரித்து 3 கோடி டன்னாக உயர்த்த திட்டமிட்டுள்ளது.*

*இதுபோன்று மேலும் பல நிறுவனங்களும் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராகி உள்ளன. உருக்கு பொருள்கள் உற்பத்தி அதிகரிப்பதால், நாட்டின் தொழில் துறை மேம்பட்டு, பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேற்றம் ஏற்படும்.*